பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(C-9881)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 29 திங்கட்கிழமை (13.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

## விசவாயு தாக்கி இளைஞன் பலி

### வவுனியாவில் சோகம்

(வவுனியா)

வவுனியா, சேமமடு பகுதியில் மாட்டுச் சாணத்தின் விசவாயு தாக்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவ 23

## ராஜாங்கனை பிரதேச

## தபால் மூல வாக்களிப்பு இடைநிறுத்தம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் ராஜாங்கனை பிரதேச தபால்மூல வாக்களிப்பு மறுஅறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என்று அந்த மாவட் 23

## நேற்று மட்டும் 106 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் 104 பேருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் கந்தக்காடு போதைப் 23

## நடிகை ஐஸ்வர்யா மகள் ஆரத்யா இருவருக்கும் கொரோனா



23

## தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் 23

## வவுனியாவில் இருவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா பம்மைமடு தனிமைப்படுத் 23

## —கொரோனாத் தொற்று தீவிரம்—

# பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை!



## கல்வி அமைச்சு அதிரடி அறிவிப்பு

- இன்று முதல் வெள்ளி வரை விடுமுறை
- அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை
- தனியார் கல்வி நிலையங்களுக்கும் விடுமுறை

**அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கும் இன்று ஜூலை 13ஆம் திகதி தொடக்கம் வரும் 17ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

அந்தவகையில், இன்று முதல் 17ஆம் திகதி வரை நாடளாவியரீதியிலுள்ள கல்வி நிலையங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. 23

## உரும்பிராயில் விபத்து: பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி இளம் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். 24

## கோஷ்டி மோதல் மூவர் படுகாயம்

### துன்னாலையில் சம்பவம்

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த மூவர் 23




## இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக

## படகு மூலம் யாழுக்கு வந்த இருவர் உட்பட நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகப் படகு மூலம் நாட்டுக்குள் பிரவேசித்த இருவர் உள்ளிட்ட நால்வரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ள 24

## வாக்குகள் விலை போவதை தடுத்து நிறுத்துவோம்!

தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

22ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்க்கு கொரோனா தொற்று

(வவுனியா)

கந்தக்காடு இராணுவ முகாமில் 23

# கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறு பிரதேசங்களில் அதிகரிக்கலாம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

வெவ்வேறு பிரதேசங்களில் நோயாளர்களை இனங்காண்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே நாடு முழுமையாக திறக்கப்பட்டது.

ஆனால் எந்தவொரு நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் மக்களும் வெவ்வேறு குழுக்களும் இந்த நிலைமையை உதாசீனப்படுத்தும் நிலைமையே காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில் கந்தக்காடு புனர் வாழ்வளிக்கும் மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றுக்குள்ளனோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

இவ்வாறு கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலைவரம் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெளிவுபடுத்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

கந்தக்காடு புன்ர்வாழ்வளிக்கும் நிலையத்தில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை ஓரளவு அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது. எனினும் ராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நபர் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளார். அவரது மனைவி மற்றும் மகளும் வெளியிடங்களுக்குச் சென்றுள்ளமையே தற்போது பிரச்சினையாகும்.

இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர். சனிக்கிழமை சுகாதார அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள தொழிநுட்ப குழு கூடியது.

இதில் பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில் தொற்றுக்குள்ளானோர் எஞ்ணிக்கை மேலும் அதிகரிகக் கூடும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பலம் சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புதுறையினரிடம் காணப்படுகின்றது. இவர்களால் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் வெவ்வேறு பிரதேசங்களில் நோயாளர்களை இனங்காண்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே நாடு முழுமையாக திறக்கப்பட்டது.

ஆனால் எந்தவொரு நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் மக்களும் வெவவேறு குழுக்களும் இந்த நிலைமையை உதாசீனப்படுத்தும் நிலைமையே காணப்படுகிறது.

கொரோனா வைரஸ் எம் ஒவ்வொருவருக்கும் தொற்றாமல் இருப்பதற்கான செயற்பாடுகளை முழுமையாக மீறியே இவர்களனைவரும் செயற்படுபடுகின்றனர் என்பது குறிப்பிட்டு கூற வேண்டிய விடயமாகும் என்றார். (ஞா)

# நிபுணர்களின் கருத்திற்கமைய கொரோனா உக்கிரமடையும்

## முன்னாள் சபாநாயகர் கரு கணிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலைமையானது அனர்த்தமான மட்டத்திற்கு உக்கிரமடைய கூடும் என சுகாதார துறை தொடர்பான அனுபவமுள்ள விசேட நிபுணர்களின் கருத்தாக இருப்பதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

ஏற்படக்கூடிய தொற்று நோயைத் தவிர்ப்பதற்காக மக்கள் தமக்கான பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வது மிகவும் முக்கியம். சுகாதார ஆலோசனைகளை கூடியவரை பின்பற்றுமாறு மக்களிடம் தயவுடன் கோரிக்கை விடுக்கின்றேன்.

எவ்வாறாயினும் அனர்த்தமான நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும் கொரோனா நிலைமையின் கீழ் தேர்தலை நடத்துவது சம்பந்தமாகவும் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் இதுவரை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடாமை கவலைக்குரிய விடயம்.

இந்த வழிகாட்டலுக்கு அமைய மக்கள் மற்றும் தேர்தல் பிரசாரங்களை ஒழுங்கும் செய்யும் நபர்கள் பின்பற்றுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு



தேவையான அதிகாரங்கள் எதுவும் அரச அதிகாரிகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இந்த வழிக்காட்டல்கள் வர்த்தமானியில் வெளியிட்டு சட்டமாக்கப்படாமையே இதற்கான காரணம் எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# 120 கிலோ கஞ்சாவுடன் சுழிபுரத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் 120 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் நேற்று இரவு வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு வட்டுக்கோட்டை பொலிஸ நிலைய புலனாய்வு பொறுப்பதிகாரி உப பரிசோதகர் மிலோஜன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது அதே பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 40 வயதுடைய இரு நபர்கள் 120 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா-32)

## வெலிக்கடையிலிருந்து கைதிகளை மீள அழைக்க தீர்மானம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீளச் சிறைக்கு அழைத்து பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருவர் கொரோனா தொற்றிற்கு இலக்கானதை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

ஜுலை 1ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்காக, ஜுன் 27ஆம் திகதி அவர் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டிருந்தார்.

ஜுலை 7ஆம் திகதி நடத்தப்பட்ட பரிசோதனையில் கைதிக்கு கொரோனா தொற்று உறுதியானது. ஏனைய கைதிகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் மேலுமொரு கைதிக்கும் தொற்று இருப்பது உறுதியானது.

இந்தக்காலகட்டத்தில் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீள சிறைச்சாலைக்கு அழைத்து பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (ஞா)


தங்கம்மா முதியோர் இல்லம்

வேலையாட்கள் தேவை

01) **பராமரிப்பாளர்**:- தங்கம்மா முதியோர் இல்லத்தில் இருக்கும் தோட்டங்களைப் பராமரிக்கவும், முதியோர் இல்லங்களைச் சுத்தம் செய்து பராமரிக்கவும், முதியோர் இல்லத்தைக் கண்காணிக்கவும் ஆட்கள் தேவை.

வயதெல்லை:- 45-60 வயதிற்குட்பட்டவராகவும் நல்ல சுகதேகியாகவும் இருக்க வேண்டும். இல்லத்திலேயே இரவு, பகல் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

02) **சமையலாளர்** :- 40-55 வயதிற்குட்பட்ட முழு நேரம் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

(C-9883)

A9 வீதி, புதுக்குளம், கனகராயன் குளம்
T.P : 076 248 2766
முகாமையாளர் : 077 449 9619



பொன்னாடை போர்த்தி, பதக்கம் அணிவித்து, விருது வழங்கி கௌரவிப்பு



இன்று (13.07.2020) திங்கட்கிழமை
நடைபெறும் மண்டலாபிஷேக
பூர்த்தியின்போது நாதஸ்வர
வித்துவான்
**திரு கோபாலசாமி நாதமுரளி**
அவர்கள்
**" நாதஸ்வர கலாமணி "**
என்னும் விருது
வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்.
கௌரவிப்பு வழங்குபவர்
கும்பாபிஷேக பிரதமகுரு
கலாநிதி சிவஸ்ரீ
**நா. கலாதரக்குருக்கள்**
( B.A. Hons, M.A.,PHD. )

(C-9885)

ஆலயபரிபாலன சபை
எழுதுமட்டுவாள் கிளாலி அருள்மிகு
ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 27 வயது சைவ உணவு உண்ணும் பழக்கமுடைய உத்திரட்டாதி 2ம் பாத நட்சத்திரம், பட்டதாரி மணமகளுக்கு சைவ உணவு உண்ணும் பழக்கமுடைய பட்டதாரி மணமகனை இலங்கையில் தேடுகின்றோம்.

(C-9884)

மேலதிக விபரங்களுக்கு
சொர்க்கம் திருமண சேவை
www.sorkham.com
00141 666 61855
0776505097 , 0762364188

# சிறுபான்மை மக்களை கண்காணிப்பதில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடவில்லை

## இலங்கையின் பதில் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மறுப்பு




(கொழும்பு)

**நாட்டில் சிறுபான்மை இன மக்களைக் கண் காணிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளுக்கான சுதந்திரம் குறித்து ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் என்வுயுல் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இதனை நிராகரித்துள்ள ஜெனீவாவிற்கான இலங்கையின் பதில் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி தயானி மெண்டிஸ், தேசிய பாதுகாப்பு நலன்களை அடிப்படையாகக்கொண்டு வழமையான சோதனை நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெறுகின்றன என்றும் விசேடமாக எந்தக் குழுவைச் சேர்ந்த மக்களையும் கண்காணிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு தரப்பினர் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளார்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இவை இடம் பெறுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகெங்கும் அதிகரித்து வரும் தீவிரவாத சக்திகளின் நுட்பமான நடவடிக்கைகளின் மத்தியில் எந்த நாடும் அதன் தேசிய நலன்களை சமரசம் செய்வதால் மோசமான விளைவுகள் ஏற்படலாம் என இலங்கை கருதுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரை சட்ட அமுலாக்கல் தரப்பினரிடமோ அல்லது மனித உரிமைகள் அல்லது பொலிஸ் ஆணைக்குழுவிடமோ முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் அதன் மூலம் இந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்றும் சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவது குறித்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கும் அனைத்து நம்பிக்கைகளையும் பின்பற்றுபவர்களையும் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## அமிதாப்பச்சனுக்காக பிரதமர் மகிந்த உருக்கம்

(கொழும்பு)

பிரபல இந்திய திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் மற்றும் அவரது புதல்வர் ஆகியோர் சிறந்த உடல் நலத்துடன் விரைவர்க குணமடைய அவர்களுக்காக பிரார்த்திப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு அவர்கள் இந்தியாவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது தொடர்பில் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

77 வயதான நடிகர் அமிதாப்பச்சனுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் மும்பையில் உள்ள நானாவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. கிருஷ்ணபிள்ளை குகநாதன் (SLPS-1)

(Special.Sc.Trd, BA, Dip.in.Edu, M.Ed, PGDEM)

அவர்கள் 03.10.2018ஆம் திகதி முதல் இலங்கை **அதிபர் சேவை தரம் 1 இற்கு** பதவி நிலை உயர்வு பெற்றுள்ளார்.

பதவி நிலை உயர்வு பெற்ற எமது பாடசாலை அதிபர் மென்மேலும் பட்டங்கள், பதவிநிலை உயர்வுகள் பெற்று தனது சேவைக்காலத்தில் சிறப்பான சேவையாற்றுவதோடு, சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல அருள்மிகு புற்றளை சித்தி விநாயகரின் ஆசி கிடைக்க வேண்டுவதுடன் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.






பாடசாலைச் சமூகம்

(யா/புற்றளை மகா வித்தியாலயம்)


(C-9880)

நாடாளுமன்றத் தேர்தல்-2020






தென்மராட்சி மண்ணின்
மைந்தனே
எங்கள் வாழ்வில்
ஒளியேற்றிய ஆசானே
எங்களைப் போன்று
எம்மக்களின் வாழ்விலும்
ஒளியேற்ற உங்கள் தெரிவை
நாம் உறுதியாக்குகிறோம்



எங்கள் ஆசானிடம்
25 ஆண்டு காலம்
கல்விபயின்ற
ஆயிரமாயிரம் உறவுகளே
உங்கள் வாக்குகள்
மட்டுமல்ல
உங்கள் நண்பர்களின்
வாக்குகளையும்
பெற்றுக் கொடுங்கள்

(027)

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி X

2 6 அருந்தவபாலன் Sir இன்
- மாணவர்கள் -

## இராசிபலன்

13.07.2020
ஆனி 29, திங்கட்கிழமை
அட்டமி மாலை 6.23 மணிவரை
ரேவதி பிற்பகல் 12.08 மணிவரை
சுபநேரம் 11.59-1.29 மணிவரை
இராகுகாலம் 7.29-8.59 மணிவரை
சந்திராஷ்டமம் - அத்தம்

வளவன்


மேஷம்

தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு குறையலாம், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.


மிதுனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், புதிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


கடகம்

தொல்லை கொடுத்தவர்கள் தோள்கொடுத்து உதவ முன்வரலாம், திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் எளிதில் கைகூடும், தந்தை வழியில் தனவரவுகள் வந்து சேரலாம்.


சிம்மம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளை காணும் நாள், உறவினர் பகைமாறும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம்.


துலாம்

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலை உயர்வதற்கான வழியைக் கண்டுகொள்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


தனுசு

அரசியல் செல்வாக்கு அதிகரிக்கும் நாள், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள புதிய வழி பிறக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


மகரம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நல்ல மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

குடும்பத்தார் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்க முன்வரலாம், வியாபார விருத்தியுண்டு, சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.


மீனம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

நல்லவர்கள் பாராட்டக்கூடிய நற்செயல்களில் மட்டும் ஈடுபடு.

# கூட்டமைப்பு ஆணையை மீறி செயற்பட்டதால்தான் நாம் புதிய கூட்டணியாக மாறக்காரணம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு


(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையை மீறி செயற்பட்டதன் காரணத்தால் தான் இந்தப் புதிய கூட்டணியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உருவாக்கக் காரணம் எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். நேற்று முன்தினம் ஊரெழுவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தமிழ் மக்களுக்கான இனப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்ட முடியவில்லை.

தந்தை செல்வாகாலத்தில் அறவழிப்போராட்டம் 30 வருடங்களுக்குமேல் நடைபெற்றது.



எல்லா வழிகளிலும் முயற்சித்துப் பார்த்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் கிடைக்கவில்லை.

அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்ட பின்னரே தனிநாடு தவிர மாற்றுவழி இல்லை என வட்டுக்கோட்டை தீர்மானம் உருவாகியபோது தந்தை செல்வா கூறியிருந்தார்.

அதனைத் தொடர்ந்தே ஆயுதப் போராட்டம் 35 வருடங்களாக நடைபெற்றது. ஆனால், அதுவும் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத்திற்கு அனுப்பிய பின்னர் தமிழ் மக்களுக்கான தேசிய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

சர்வதேச ரீதியாக ஆதரவுகள் உள்ளன.ஆகவே இனப்பிரச்சினைக்கான தீர்வை பெறுவோம் என்று கூறினார்கள். ஆனால், தமிழ் இனப்பிரச்சினைக்கான எந்த முடிவையும் எட்டவில்லை.

தனித்து நின்று எதனையும் சாதிக்க முடியாது. கூட்டாக இணைந்தால் தான் எதனையும் பெறமுடியும். தேர்தலின் பின்னர் இன்னும் எமது கூட்டணி விரிவுபடுத்தப்படும். தமிழ் மக்களினுடைய கோரிக்கைகளை வென்றெடுக்கக் கூடிய பாரிய கூட்டணியாக இது மாற்றுவதற்கான முயற்சிகளை செய்வோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டில் ஜனநாயக சூழலை ஐ.தே.க.தான் ஏற்படுத்தியது

## விஜயகலா கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயக சூழலை ஐக்கிய தேசியக்கட்சி தான் ஏற்படுத்தியதென அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. "கடந்த 20 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகள் அனைத்திலும் ஜனநாயகமற்ற பதற்றமான சூழ்நிலையிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர்.



அந்தவகையில் தீவுப்பகுதி மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிப்பதன் ஊடாகவே ஜனநாயகமான சூழல் மீள உருவாக்கப்படும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# இளம் பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்ய கைகோருங்கள்

## மயூரன் வேண்டுகோள்



(நெளுக்குளம்)

இளம் பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்யும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியில் வன்னிமக்கள்கைகோருங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி தேர்தல் தொகுதி வேட்பாளர் செ. மயூரன் தெரிவித்தார்.

மல்லாவியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளம் பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பணியில் வன்னி தேர்தல் தொகுதி மக்கள் கைகோர்க்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

அகிம்சை ஆயுதம் என்ற இரு தளத்தில் நின்று பயணித்த தமிழ் இனத்தினை இன்று அவர்களது நிலபுலங்களை இழக்கும் நிலைக்கு பேரினவாதிகள் தள்ளிவிட்டுள்ளனர். எமது இருப்புக்காக சிங்கள பேரினவாத மனோநிலையில் செயற்படுபவர்களுடன் மல்லுக்கட்ட வேண்டிய காலச்சூழலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே தமிழர்கள் தமக்கான இருப்பை உறுதி செய்து கொள்ளும் தீர்க்கமான நிலைக்கு வந்துள்ளனர். கூட்டமைப்பு என்ற பலமான இயக்கமே தமிழர்களின் விடிவுக்கான வழிகாட்டியாக இருக்கும் என்பதனை மறுக்க முடியாது.

தென்னிலங்கையில் பல இளம் பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பி அவர்களை தங்கள் பிள்ளைகளாகவும் சகோதர சகோதரியாகவும் எண்ணி தமது பிரதேசத்தின் குறைகளை தீர்த்துக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

கூட்டமைப்புக்கு புதிய இரத்தத்தினை பாய்ச்சுவதற்காகவும் இளைஞர்களின் கைகளில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு செல்ல வேண்டுமென்பதற்காகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இளைஞர்களை கூட்டமைப்பின் ஊடாக அனுப்பி சாத்தியப்படுத்துங்கள்.

இன்று எமது வரலாற்று இடங்களை யார் யாரோ உரிமை கோரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இது ஆபத்தானது. எனவே தற்போதைய ஆட்சியாளர்களுடன் எமது உரிமையை அகிம்சை ரீதியில் போராடிப் பெறக்கூடிய ஆளுமையுள்ளவர்களையும் இளம் தலைமுறையினரையும் இம்முறை பாராளுமன்றத்திற்கு அனுப்பும் கைங்கரியத்தினை வன்னி மக்கள் கையில் எடுத்துக்கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார். (ஜ-299)

# பள்ளத்தில் வீழ்ந்த சிறுத்தை



(கொழும்பு)

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த பள்ளத்தில் வீழ்ந்து சிறுத்தையொன்று நேற்றுக் காலை பிடிபட்டுள்ளது.

கினிகத்தேன-கனில்வர்க் தோட்டத்தின் முதலாவது வீட்டுத் தொகுதிக்கு பின்னால் அமைக்கப்பட்டுள்ள ஒரு புதருக்கு நடுவிலேயே குறித்த சிறுத்தை சிக்குண்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு வீழ்ந்துள்ள சிறுத்தையை மயக்க மருந்து செலுத்தி மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நல்லதண்ணி வனவிலங்கு காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)




# சிலாபத்தில் உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனாத் தொற்றில்லை

## மருத்துவ அறிக்கையில் தகவல்

(சிலாபம்)

சிலாபத்தில் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வந்து உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா தொற்றவில்லை என அவருக்கு மேற்கொள்ளப்பட்ட விசேட வைத்திய பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

குறித்த இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட வைத்திய பரிசோதனையின் பின்னர் வெளியாகிய அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்ததாக சிலாபம் மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் கபில மல்லவாராச்சி தெரிவித்துள்ளார். மாரவில பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய திருமணமான இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் முந்தலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் ஆபத்தான நிலையில் இருந்தமையினால் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளார்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனுக்கு கொரோனா தொற்றியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட போதிலும் அவருக்கு கொரோனா தொற்றவில்லை என வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் கொரோனா சட்டத்திற்கமைய அவரது உடல் தகனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஜ-4)

# நேற்றும் தேவாலயங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது



(குருமன்காடு)

வவுனியா கிறிஸ்தவ தேவாலயங்களில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இச்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று நேற்றைய தினமும் கிறிஸ்தவ தேவாலயங்களில் பாதுகாப்பு பலப்பட்டுத்தப்பட்டு இராணுவத்தினர், பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள் தேவாலயங்களை காணொளி, புகைப்படம் எடுப்பதற்கும் இராணுவத்தினர் தடை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-250)



# பயங்கரவாதம் மற்றும் கொரோனாவை விட பொலித்தீன் பாவனை மிகவும் ஆபத்தானது

## யாழ்.கட்டளைத் தளபதி எச்சரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**பயங்கரவாதம் மற்றும் கொரோனாவை விட மிகவும் ஆபத்தானது இந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.**

யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினரால் பொலித்தின் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கழிவகற்றல் செயற்பாடு நேற்று இடம் பெற்றதோடு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இலங்கையை பொறுத்த வரைக்கும் பயங்கரவாதம் மற்றும் கொரோனாவினை முடிவுக்கு கொண்டு வந்து விட்டோம்.ஆனால் இந்த பொலித்தீன் பாவனை மற்றும் பிளாஸ்டிக் பாவனையில் இருந்து மக்களை பாதுகாக்கின்ற வேலைத்திட்டத்தில் தற்போது முன்னெடுத்து வருகின்றோம். அது மிகவும் கடினமான விடயம்.எனவே நாம் இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் குறித்த திட்டத்தினை ஆரம்பித்துள்ளோம்.

எனினும் இது தொடர்பில் பொது மக்களும் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.ஏனெனில் நாம் அன்றாடம் நமது வாழ்க்கை முறையில் இந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம்

முதலில் அதனை நிறுத்த வேண்டும் .அதனை நிறுத்தாத பட்சத்தில் எதிர்கால சந்ததியினரை பாதிக்கும்.எனவே மக்கள் இது தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது. (ஜ-5)

## வீதியை புனரமைக்குமாறு பொதுமக்களும் சாரதிகளும் வேண்டுகோள்



(குப்பிழான்)

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படும் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் தொடக்கம் எழுதுமட்டுவாழ் சந்தி வரையான சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமான வீதியானது நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

இதனால், குறித்த வீதி போக்குவரத்துச் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பகுதி மக்களும், சாரதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-18)


## மஹோற்சவம்

(குப்பிழான்)

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்" ஸ்ரீஞான துர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், ஆடிப்பூர நாளான மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன.இன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகமும் இடம் பெறும். (4-5-18)

## கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாக்க நோன்பிருந்த முன்னாள் படைவீரர்



(நெல்லியடி)

நெல்லியடி துன்னாலை மத்தி கரவெட்டியைச் சேர்ந்த 81 வயதுடைய சின்னத்தம்பி நடராஜா என்பவரால் மக்களை கொரோனாவிலிருந்து பாதுகாக்கும்படி இறைவனை வேண்டி மேற்கொள்ளப்பட்ட 108 நாள் விரதம் தலைமுடி மற்றும் தாடி இறக்குதலுடன் நேற்று நிறைவு பெற்றது. இவரால் கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி குறித்த விரதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக 108 நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டு நேற்றைய தினம், குறிகட்டு பிள்ளையார் கோவில் தலைமுடி மற்றும் தாடி இறக்குதலுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. இவர் முன்னாள் இராணுவ வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.(5-8)

## 53 பேருக்கு பரிசோதனை எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 53 பேருக்கான கொரோனாத் தொற்றுப்பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

எனினும்,எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். ©

## யாழ்.நகரில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பணி படையினரால் முன்னெடுப்பு









(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் பொலி த்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழி வுகளை அகற்றி சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தும் பணி நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிக் சூரிய தலைமையில் நடைபெற்றது. இதில் இராணுவம், பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து யாழ்ப்பாண நகரை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். (4-5-8)

# தேரர்களும் இராணுவமும் கிழக்கின் தலைவிதியை மாற்றப்போகின்றனர்

## நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**கிழக்கின் தொல்பொருளியல் செயலணி எதற்காக ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது எல்லாவல மேதானந்த தேரரின் கருத்துக்களை கவனிக்கும் போதே தெளிவாக வெளிப்பட்டுவிட்டது என்றும் தேரர்களினதும் இராணுவத்தினதும் உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றப் போகின்றார்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் முதல்வருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.**

கிழக்கு மாகாண தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாக்க ஜனாதிபதி நியமித்துள்ள செயலணியில் அங்கம் வகிக்கும் எல்லாவல மேதானந்த தேரர் அண்மைக்காலமாக முன்வைத்து வருகின்ற கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி எதற்காக நியமிக்கப்பட்டுள்ளதென கூறாமல் கூறிவிட்டார் மேதானந்த தேரர். தமிழ் மற்றும் முஸ்லிம் சரித்திரவியலாளர்களைக் கொண்டிராத குறித்த செயலணி பெரும்பான்மையர் தமிழ் மொழியைப் பேசும் கிழக்கு மாகாணத்திற்கு எதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்றால் கிழக்கை சிங்கள பௌத்த மாநிலம் என்று அடையாளம் காட்டவே என்பது தேரரின் கூற்றிலிருந்து புலனாகின்றது.

சபுமல் குமாரயா என்ற சிங்கள இளவரசர் என்று செண்பகப் பெருமாள் என்ற தமிழரை அழைக்கின்றார் எமது தொல்லியலாள தேரர். செண்பகப் பெருமாள் என்பவர் தமிழர். செண்பகப் பெருமாள் என்ற கிழக்கிலங்கைத் தமிழ் மகனின் தந்தையான மாணிக்கத் தலைவன் என்ற கரையார் குலத் தலைவன் இறந்த பின் ஆறாம் பராக்கிரமபாகுவால் செண்பகப் பெருமாள் தத்தெடுக்கப்பட்டான். அந்தத் தமிழ் மகனின் பெயரே சபுமல் குமாரயா என்று மாற்றப்பட்டது. அக்காலகட்டத்தில் இப்போது போல் தமிழ் சிங்கள உறவுகள் கூர்மை அடைந்திருந்திருக்கவில்லை.

ஆகவே குறித்த தமிழ் மகனை சிங்கள இளவரசர் என்று தேரரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளமை பிழையான தகவலைத் தருவதாய் உள்ளது. உண்மையை மறைத்து ஏதோ சிங்களவர் ஒருவர் சென்று நல்லூரை ஆண்டார் என்று சிங்களவர் புராணத்தைப் பாட வேண்டிய அவசியம் என்ன? இது சிங்கள மக்களை ஏமாற்றும் ஒரு கபட நாடகம் அல்லவா? அடுத்து தேரர் திருக்கோணேஸ்வரம் பற்றிப் பிழையான தகவல்களைப் பரப்பப் பார்க்கின்றார். திருக்கோணேஸ்வரம் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று.

புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே பஞ்ச ஈஸ்வரங்கள் இந்த நாட்டில் இருந்து வந்துள்ளன. நகுலேஸ்வரம் (கீரிமலை) தான்தோன்றீஸ்வரம் மற்றும் திருக்கேதீஸ்வரம் (மன்னாரில் உள்ளது) ஆகியவையே மற்றைய ஈஸ்வரங்கள்.


இவை புத்தர் பிறப்பதற்கு முன்பிருந்தே இலங்கையில் இருந்து வந்த சிவலிங்கத் தலங்கள். இராமாயணம் பற்றிக் கூறி இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்களைப் பார்க்க வாருங்கள் என்று மத்திய அரசாங்கம் சுற்றுலாப் பயணிகளைக் கூவி அழைக்கின்றது.

தேரரோ நேற்று வந்த புத்த விகாரையின் இடத்திலேயே கோணேஸ்வரம் பின்னர் கட்டப்பட்டது என்கின்றார். வேண்டுமென்றே சிங்கள பௌத்த விகாரையின் இடத்தில் திருக்கோணேஸ்வரம் கட்டப்பட்டது என்று கூறி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கப் பார்க்கின்றார். இவர் தமது சரித்திரத்தையும் தொல்லியலையும் எமது தமிழ்ப் பேராசிரியர்களிடம் கற்றல் நன்று. கிணற்றிலுள்ள மண்டூகத்திற்கு கிணறு தான் உலகம். அதைப் பொறுத்தவரையில் அதற்கப்பால் எதுவுமே இல்லை. இருக்கவும் முடியாது!

இவரின் இந்த இரு கூற்றுகளில் இருந்தே ஜனாதிபதி செயலணியின் கரவான எண்ணங்கள் வெளி வந்துள்ளன. மதிப்புக்குரிய தேரர் போன்ற மதி கெட்டவர்களே இந்த செயலணியில் இருந்து இராணுவ உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றப் போகின்றார்கள் என்று தெரிகின்றது.

அவர்களின் சூழ்ச்சி பலித்தால் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்று பெயர் பெற்றுவிடும் அதைப் பின்னர் வந்த தமிழர்கள் ஆக்கிரமித்தார்கள் என்ற பொய்யான கூற்றை உலகம் பூராகவும் ஏற்றுக் கொள்ளச் செய்து விடுவார்கள்.

எமது தமிழ் சரித்திர மற்றும் தொல்லியல் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உண்மையை உரக்கக் கூற முன்வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)




## மேலும் ஒருவர் பூரண குணம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் ஒருவர் பூரணமாக குணம் அடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, 1981 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, 2601 பேர் இதுவரை கொரோனா நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கட்சி சார்பாகவே வழங்கப்பட்டது

### திகாம்பரம் கூறுகிறார்



(நுவரெலியா)

கொரோனா பரவல் காலத்தில் வழங்கப்பட்ட 5000 ரூபாய் கொடுப்பனவு கட்சி சார்பாகவே வழங்கப்பட்டது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த ஆட்சியின்போது நாம் மலையக மக்களுக்கு பல சேவைகள் செய்தோம். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்த பின்னர், எமது அமைச்சும் பறிபோய்விட்டது.

அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் எல்லாம் ப்ாதியிலேயே நிற்கின்றன. புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர், திட்டங்களை முன்னெடுக்க நிதியும் ஒதுக்கவில்லை. கவனமும் செலுத்தவில்லை. எமது ஆட்சி தொடர்ந்திருந்தால் இந்நேரம் வேலைத் திட்டங்கள் எல்லாம் முடிக்கப்பட்டிருக்கும்.

எம்மால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். உண்மை என்னவென்பது அவர்களுக்கு தெரியும்.


எமக்கான ஆதரவை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. புதிய அரசாங்கம் பதவிக்குவந்த நாள் முதல் இனவாத அடிப்படையிலேயே செயற்படுகின்றது. 5000 ரூபாய் கொடுப்பனவுகூட கட்சி சார்பாகவே வழங்கப்பட்டது. பொருட்கள், சேவைகளின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

எனவே, நடைபெறவுள்ள தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எமது கூட்டணி வெற்றிபெறும். நாம் அமைச்சராவதும் நிச்சயம். அபிவிருத்தித் திட்டங்களும் தொடரும்" என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## 31 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க் கட்சி தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 31ஆவது நினைவு தின நிகழ்வு, யாழ்ப் பாணம் நாச்சிமார் கோவிலடி யில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் இன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும். (4-5)

## பளைப் பகுதியில் கடத்தப்படவிருந்த 52 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், பளை, வேம்படி பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் காங்கேசன்துறை கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 52 கிலோ 680 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த கஞ்சா கைப் பற்றப்பட்டது.
குறித்த தொகை கஞ்சாவைக் கொண்டு செல்ல பயன்படுத்திய மீன்பிடிப் படகொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.குறித்த சோதனை நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் அனைவரும் தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-8)

## தருமபுரம் பொலிஸ் பிரிவில் வாளுடன் இருவர் கைது

(தருமபுரம்)
தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இருவர் கடந்த 9,10 ஆம் திகதிகளில் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.
இதன்போது அவர்களிடமிருந்து கூரிய வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.
கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளதையடுத்து தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-8-316)

## ஹெரோயினுடன் இருவர் கைது

(தருமபுரம்)
கிளிநொச்சி புளியம்பொக்கணை பேருந்து தரிப்பிடத்தில் 4 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் கொடிகாமம், கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.
கிளிநொச்சியைச் சேர்ந்த மேலும் 4 பேர் 6 மில்லி கிராம் குடு போதைப் பொருளுடன் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-8-316)



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை கல்லாறு பகுதியில் நேற்றுமுன்தினம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகள் மூவரும் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்து செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்படவுமுள்ளனர். (4-5-316)

# ஆடுமேய்க்கச் சென்ற இளைஞன் படையினரால் தாக்கப்பட்ட வழக்கு

## ஓகஸ்ட் 8 இல் விசாரணை

(நெளுக்குளம்)
மாங்குளம் துணுக்காய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுப்பகுதிக்கு கடந்த வாரம் ஆடுகள் மேய்ப்பதற்காக சென்ற 20 வயது இளைஞனை தாக்கிய படையினர் பின்னர் மாங்குளம் வனவள பாதுகாப்புப்பிரிவினரிடம் ஒப்படைத்தனர் .
இந்நிலையில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்ட இளைஞன் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும் தனது எழுத்து மூலமான முறைப்பாட்டினை மேற்கொண்டார். இதையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின்போது இளைஞன் மீது தாக்குதல் நடத்திய படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக தாக்குதலுக்குள்ளான இளைஞன் தெரிவித்துள்ளார் .
இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், மாங்குளம் ஒட்டங்குளம் பொன்னகர் பகுதியை சேர்ந்த 20 வயது இளைஞர் கடந்த வாரம் தனது ஆடுகளை மேய்ப்பதற்காக காட்டுக்கு சென்றபோது அங்கிருந்த படையினர் குறித்த இளைஞனை தாக்குதல் நடத்தியதுடன் கைத் தொலைபேசியையும் பறித்த பின்னர் மாங்குளம் வனவள பிரிவினரிடம் ஒப்படைத்தனர். படையினர் தாக்கியதில் காயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் .
இதையடுத்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் இளைஞன் தனது ஆடுகளைக்காணவில்லை. அதனை தேடிச் சென்றபோது படையினர் தாக்கியதாக முறைப்பாடு செய்ததுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்நிலையில் கள விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் எம் , ஆர் . பிரியதர்சன மற்றும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர் . எல். வசந்தராசா ஆகியோர் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு தாக்கப்பட்ட இளைஞனிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டனர்.
இந் நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (4-5-299)



நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆலய பங்குத் தந்தை எஸ்.கே.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. (படங்கள்-மன்னார் செய்தியாளர்)

# தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம் 35 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி

## உதவித்தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)
தபால்மூல வாக்களிப்புக்கள் இன்று ஆரம்பமாகின்ற நிலையில் 35 ஆயிரம் தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், வாக்களிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ தெரிவித்தார்.
அந்தவகையில் இன்று 13 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குரிய தபால்மூல வாக்களிப்புக்கள் நடைபெறவுள்ளன. இரு அத்தாட்சிப்படுத்தும் அலுவலகர்கள் ஊடாக, சுகாதார பணிமனையில் கடமையாற்றும் சகல உத்தியோ



கத்தர்களுக்குமான சகல வாக்களிப்பு நடவடிக்கைகளும் மேற் கொள ளப் படவுள் ளன.
இன்று 268 தபால் மூல வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் கண்காணிப்பதற்காக, தேர்தல் அலுவலகர்கள் நிய மிக்கப்பட்டுள்ளார்கள்.
எதிர்வரும் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் ஏனைய தபால் மூல வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
16 மற்றும் 17 ஆம் திகதிகளில், யாழ்.மாவட்ட செயலகத்தில் முப்படை மற்றும் பொலிஸார் உட்பட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அலுவலகர்கள், தேர்தல் அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலகர்களுக்கான தபால் மூல வாக்களிப்புக்கள் நடைபெறவுள்ளன.
35 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் இந்த 5 தினங்களிலும், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-101)

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

சுபீட்சம் மிக்க தமிழர் தேசத்திற்கான தெரிவு...



X

4

# V. K. விக்னேஸ்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - ஈ.பி.டி.பி ( E.P.D.P)

சிறந்த தலைமைக்கான உங்களின் வாக்கு உங்களைப்போன்ற இன்னொரு அரச ஊழியரை உருவாக்கும்.

**"செயலே சிறந்த சொல்"**

அரச உத்தியோகத்தர்கள் ஆகிய நீங்கள் இன, மொழி, மத பேதங்களை கடந்து யுத்த காலங்களிலும் அதற்கு பின்னராக நாடு எதிர்நோக்கிய பிரச்சினையான காலங்களிலும் பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் எமது மக்களுக்கு ஆற்றிவரும் உயரிய சேவையை மிகவும் மதிக்கின்றேன்.

மேலும்,என்னை நன்கறிந்தவர்கள் நீங்கள்!

சிறந்த தொழில்நுட்ப கற்கை நெறிகளை எமது பிரதேசத்தின் இளைய தலைமுறைக்கு நல்ல ஆசிரியராக இருந்து வழங்கியது மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழிற்றுறை மன்றத்தின் தலைவராக இருந்து அவர்களின் வாழ்வாதாரத்தை என்னால் இயன்றவரை முன்னேற்றகரமானதாக மாற்றியுள்ளேன்.

எனவே,நடைபெறப்போகும் பாராளுமன்ற தேர்தலில் மிக நிதானமாகவும், உங்கள் சந்ததியின் எதிர்காலம் தொடர்பாகவும் பொறுப்போடு சிந்தித்து வாக்களிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக நீங்கள் இருக்கின்றீர்கள்.

எதிர்காலத்தில் எம் பிரதேசத்தை செழிப்பு மிக்க ஓர் இடமாக மாற்றும் வல்லமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் மாத்திரமே முடியும் என்கின்ற திடகாத்திரத்துடன் எனது மக்களுக்கான ஓர் அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளேன்.

உங்கள் முழுமையான வாக்குகளை எனக்கும், மத்தியில் அமைய இருக்கும் ஆட்சியுடன் இணைந்து தமிழர்களின் அபிலாஷைகளை வென்றடுக்கப்போகும் எனது கட்சிக்கும் வழங்கி சுபீட்சம் மிக்க ஓர் பிரதேசத்தை உருவாக்குவதில் நீங்களும் ஓர் பங்குதாரர் ஆகுங்கள்.

(C-036) V. K. விக்னேஸ்



## பாராளுமன்ற தேர்தல் - 2020

X 10



**இதுவரை ஏமாற்றியோரை ஒதுக்கி வைப்போம்**
**இனி ஒரு புதுச் சரித்திரம் படைப்போம்**

### வேலாயுதம் கணேஸ்வரன்

(யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்)

**ஐக்கிய மக்கள் சக்தி (SJB)**

(024)



## பாராளுமன்றத் தேர்தல் -2020

**கிளிநொச்சி மண்ணின் சேவைகளின் நாயகன்**



### வேதநாயகம் தபேந்திரன்

B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A(Jaf)

- கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தராக 8 வருடங்கள் (2012 முதல் 2020 ஆம் ஆண்டு வரை) பெரும் பணி ஆற்றியவர்.
- மூத்தோருக்கான ஆன்மீகப் பயணங்கள் 33.
- மாற்றுத்திறனாளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், நலிவுற்றோருக்கான வாழ்வாதாரங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 9

கிளிநொச்சி மக்களே உங்களது பொன்னான வாக்குகளை வழங்கி வெல்ல வையுங்கள்.

(022)

**கிளிநொச்சி - மூத்தோர் நலன் விரும்பிகள்**



## சேவைநலன் பாராட்டு

### திருமதி
### கலாவதி சிறிகாந்தா

(இலங்கை ஆசிரியர் சேவை தரம்-1,
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்)



**சேவை விபரம்**

யா/ மிருசுவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
29.11.1989-01.02.1993

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
02.02.1993-31.12.1994

யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்
04.01.1995-05.01.2000

யா/ புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம்
06.01.2000-11.05.2010

யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
12.05.2010-13.07.2020

முப்பத்தோ ராண்டுகள் முழுநிலவாய் முகங்காட்டித்
தப்பாமல் இளஞ்சிறார்க்குத் தண்ணளியாய் அறிவூட்டி
மிருசுவில், கைதடி, யாழ். பொஸ்கோ பணிதொடரக்
கல்வியங் காடுயர் காசிப்பிள்ளையில்
நல்கினை கல்விபத் தாண்டுகள் நலமுடன்
கலாவதி சிறிகாந்தா கருணையின் பிறப்பிடம்
அலாதன கருதாத அன்பின் உறைவிடம்
ஓய்வின் பின்னரும் உவப்புடன் பொலிகவே!

**பாடசாலைச் சமூகம்**
**யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்**

(C-9878)



## அதிசயம் ஆனால் உண்மை

கொழும்பு விலையில் அச்சுவேலி வல்லை றோட்டில் ஸ்ரார் பூட் வியாபார ஸ்தாபனம் திறக்கப்பட்டுள்ளது. இங்கே மளிகைப் பொருட்கள் முதற்கொண்டு அனைத்துப் பொருட்களும் கொழும்பு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்விற்பனை நிலையம் இங்கே திறக்கப்படுவது அச்சுவேலி மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். நாங்களும் பெரும் மகிழ்ச்சியடைவதோடு எங்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் என்றென்றும் வழங்கப்படும்.

உங்களின் உயர்வையும் முன்னேற்றத்தையும் என்றென்றும் விரும்பும்

**வீடியோ கலாமினி,**
**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,**
**அச்சுவேலி.**

(3283)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்



03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அட்டவணை- 4 முதலாவது பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள்--1947
வட மாகாணம்

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | பெற்ற வாக்குகள் | கட்சி | A | B |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | அல்பிரட் தம்பையா | 5,552 | சுயேட்சை | 33,045 | 5 |
| வட்டுக்கோட்டை | கே. கனகரத்தினம் | 11,721 | த.கா. | 37,334 | 6 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே. வி. செல்வநாயகம் | 12,126 | த.கா. | 38,871 | 3 |
| யாழ்ப்பாணம் | ஜீ.ஜீ. பொன்னம்பலம் | 14,324 | த.கா. | 42,546 | 2 |
| கோப்பாய் | சி. வன்னியசிங்கம் | 9,619 | த.கா. | 32,999 | 3 |
| பருத்தித்துறை | ரீ. இராமலிங்கம் | 10,396 | த.கா. | 41,682 | 4 |
| சாவகச்சேரி | வீ. குமாரசாமி | 11,813 | த.கா. | 28,377 | 2 |
| மன்னார் | சி. சிற்றம்பலம் | 5,877 | சுயேட்சை | 14,587 | 3 |
| வவுனியா | சி. சுந்தரலிங்கம் | 4,026 | சுயேட்சை | 11,099 | 2 |

த.கா.- அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
A- பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, B- வேட்பாளர் எண்ணிக்கை,

**தமிழ்க் காங்கிரசின் பிளவும் தமிழரசுக் கட்சியின் தோற்றமும்**

1948 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும், மலையகத் தமிழரின் குடியுரிமை பற்றிய பிரச்சினைகளில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அணுகுமுறைகளையும் ஏற்றுக்கொள்ளாத எஸ்.ஜே. வி.செல்வநாயகம் மற்றும் சில தலைவர்கள் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறினர். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் மற்றைய பாராளுமன்ற உறுப்பினரான சி. வன்னியசிங்கம் மற்றும் செனட்டர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் ஆகியோரும் வெளியேறியது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் முதலிய தலைவர்கள் தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட சமஷ்டிக் கட்சியை (Federal Party) 1949இல் உருவாக்கினர். தமிழ்க் காங்கிரஸைவிட தமிழ்த் தேசியவாத கட்சியாக அடையாளம் காணப்பட்ட இக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்த போது தமிழ்க் காங்கிரஸின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது.

**1952: சுதந்திர இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் -வட மாகாண 9 தேர்தல் தொகுதிகள்**

சுதந்திர இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்தேர்தலில் வட மாகாணத்திலிருந்து அட்டவணை-5இல் தரப்பட்டோர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

**1956: சுதந்திர இலங்கையின் மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல் -வட மாகாண 9 தேர்தல் தொகுதிகள்**

சுதந்திர இலங்கையின் மூன்றாவது பாராளுமன்றத்தேர்தலில் வடமாகாணத்திலிருந்து அட்டவணை-6இல் தரப்பட்டோர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் பொன்.கந்தையா ஈழத்துத் தமிழ் அரசியல்வாதி. இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர். தாழ்த்தப்பட்ட தமிழ்ச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பாடசாலைகளில் அவர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று கோரியவேளை 60களில் கல்வி அமைச்சராக இருந்த டபிள்யூ. தகநாயக்கவின் உதவியினால் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் படிப்பதற்கென வசதியற்ற பகுதிகளில் 11 பாடசாலைகளைத் தொடக்கி வைத்தார்.

தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது பொன்.கந்தையா நெருக்கடியிலிருந்து நெருக்கடிக்கு என்ற தலைப்பில் நாடாளுமன்றத்தில் புகழ் கொண்ட உரையை நிகழ்த்தினார். கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் சி. வன்னியசிங்கம் 1959 செப்டெம்பர் 17 இல் காலமானார்.

அட்டவணை- 5 இரண்டாவது பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள்--1952
வட மாகாணம்

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | பெற்ற வாக்குகள் | கட்சி | A | B |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | அல்பிரட் தம்பையா | 9,517 | த.கா. | 30.138 | 5 |
| வட்டுக்கோட்டை | வீ.வீரசிங்கம் | 5,687 | சுயேட்சை | 34,135 | 6 |
| காங்கேசன்துறை | எஸ். நடேசன் | 15,337 | ஐக்கிய தேசிய கட்சி | 38,439 | 2 |
| யாழ்ப்பாணம் | ஜீ.ஜீ. பொன்னம்பலம் | 12,726 | த.கா. | 29,489 | 2 |
| கோப்பாய் | சி. வன்னியசிங்கம் | 9,410 | த.அ.க. | 32,903 | 3 |
| பருத்தித்துறை | ரீ. இராமலிங்கம் | 11,609 | த.கா. | 43,219 | 4 |
| சாவகச்சேரி | வீ. குமாரசாமி | 14,801 | த.கா. | 30,692 | 2 |
| மன்னார் | சி. சிற்றம்பலம் | 5,876 | சுயேட்சை | 14,959 | 2 |
| வவுனியா | சி. சுந்தரலிங்கம் | 6,019 | சுயேட்சை | 13,093 | 4 |

த.கா.- அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் த.அ.க.- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
A- பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, B- வேட்பாளர் எண்ணிக்கை,

அட்டவணை- 6 மூன்றாவது பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள்--1956
வட மாகாணம்

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | பெற்ற வாக்குகள் | கட்சி | A | B |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | வீ.ஏ.கந்தையா | 16,308 | த.அ.க. | 32,410 | 2 |
| வட்டுக்கோட்டை | அ.அமிர்தலிங்கம் | 14,937 | த.அ.க. | 35,927 | 2 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | 14,855 | த.அ.க. | 40,964 | 3 |
| யாழ்ப்பாணம் | ஜீ.ஜீ. பொன்னம்பலம் | 8,914 | த.கா. | 34,804 | 4 |
| கோப்பாய் | சி. வன்னியசிங்கம் | 12,804 | த.அ.க. | 34,465 | 2 |
| பருத்தித்துறை | பொன். கந்தையா | 14,381 | கம்யூனிஸ்ட் கட்சி | 44.603 | 3 |
| சாவகச்சேரி | வீ. என். நவரத்தினம் | 15.952 | த.அ.க. | 35,922 | 2 |
| மன்னார் | வீ.ஏ. அழகக்கோன் | 6,726 | த.அ.க. | 15,819 | 3 |
| வவுனியா | சி. சுந்தரலிங்கம் | 6,853 | தமிழ் பாதுகாப்பு இயக்கம் | 15,946 | 2 |

த.கா.- அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் த.அ.க.- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
A- பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, B- வேட்பாளர் எண்ணிக்கை,

**தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 95 இலிருந்து 151 ஆக அதிகரிப்பு**

1959ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை (அரசியலமைப்பு) திருத்தச் சட்டத்தின்காரணமாக இம்முறை ஆணைக்குழுவின் பணிகள் மாற்றத்திற்கு இலக்காகின. இவ்வாணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய முழுநாடும் 145 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டதோடு, இதில் 5 பல்அங்கத்தவர் தொகுதிகளும் உள்ளடக்கப்பட்டன.

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென விதிக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 151 ஆகவிருந்தது. விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் - 35, மத்திய மாகாணம் - 23, தென் மாகாணம் - 19, வட மாகாணம் - 13, கீழ் மாகாணம் - 11, வடமேல் மாகாணம் - 16, வட மத்திய மாகாணம் - 8, ஊவா மாகாணம் - 10 மற்றும் சப்ரகமுவ மாகாணம் - 16. மொத்தம் -151.

வட மாகாணத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகள் 13. அவை ஊர்காவற்றுறைத் தொகுதி, வட்டுக்கோட்டைத் தொகுதி, காங்கேசன் துறைத் தொகுதி, யாழ்ப்பாணத் தொகுதி, கோப்பாய்த் தொகுதி, பருத்தித்துறைத் தொகுதி, சாவகச்சேரித் தொகுதி, உடுவில் தொகுதி, நல்லூர் தொகுதி, உடுப்பிட்டித் தொகுதி, கிளிநொச்சித் தொகுதி, மன்னார்த் தொகுதி, வவுனியாத் தொகுதி என்பனவாகும்.

மார்ச் 1960 இல் சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் இருந்து கிளிநொச்சி நகரம் பிரிக்கப்பட்டு கிளிநொச்சி தேர்தல் தொகுதியாகப் புதிய தொகுதி அமைக்கப்பட்டது.

**1960 மார்ச் : சுதந்திர இலங்கையின் நான்காவது பாராளுமன்றத் தேர்தல் -வட மாகாண 13 தேர்தல் தொகுதிகள்**

சுதந்திர இலங்கையின் நான்காவது பாராளுமன்றத்தேர்தலில் வடமாகாணத்திலிருந்து அட்டவணை-7இல் தரப்பட்டோர் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர்.

**1960 ஜூலை : சுதந்திர இலங்கையின் ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தல் -வட மாகாண 13 தேர்தல் தொகுதிகள்**

சுதந்திர இலங்கையின் ஐந்தாவது பாராளுமன்றத்தேர்தலில் வடமாகாணத்திலிருந்து அட்டவணை- 8இல் தரப்பட்டோர் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர். (தொடரும்)

அட்டவணை- 7 நான்காவது பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள்–1960 மார்ச்
வட மாகாணம்

| தேர்தல் தொகுதி | வெற்றிபெற்றவர் | பெற்ற வாக்குகள் | கட்சி | A | B |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | வீ.ஏ.கந்தையா | 10,820 | த.அ.க. | 25,616 | 3 |
| வட்டுக்கோட்டை | அ.அமிர்தலிங்கம் | 11,524 | த.அ.க. | 28,955 | 5 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | 13,545 | த.அ.க. | 28,473 | 3 |
| யாழ்ப்பாணம் | அல்பிரட்..த.துரையப்பா | 6,201 | சுயேட்சை | 24,299 | 4 |
| கோப்பாய் | எம். பாலசுந்தரம் | 10,279 | த.அ.க. | 27,858 | 6 |
| பருத்தித்துறை | க. துரைரத்தினம் | 5,679 | த.அ.க. | 19.408 | 6 |
| சாவகச்சேரி | வீ. என். நவரத்தினம் | 13.907 | த.அ.க. | 25,822 | 3 |
| உடுவில் | வி. தர்மலிங்கம் | 9.033 | த.அ.க. | 27,278 | 7 |
| நல்லூர் | Dr. இ.மு.வி. நாகநாதன் | 9,651 | த.அ.க. | 26.966 | 6 |
| உடுப்பிட்டி | மு. சிவசிதம்பரம் | 7,365 | த.கா. | 28.620 | 4 |
| கிளிநொச்சி | ஏ.சிவசுந்தரம் | 3,741 | த.அ.க. | 13,991 | 5 |
| மன்னார் | வீ.ஏ. அழகக்கோன் | 6,463 | த.அ.க. | 16,936 | 4 |
| வவுனியா | தா. சிவசிதம்பரம் | 5,370 | சுயேட்சை | 18,469 | 4 |

த.அ.க.- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
A- பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை, B- வேட்பாளர் எண்ணிக்கை,

# அதிக இலாபம் பெற வேண்டுமானால்

## பெறுமதிப் பொருட்களை ஏற்றுமதி செய்யுங்கள்

## ஜனாதிபதி விவசாயிகளிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

**விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட ஆக்கப்பெற்ற பொருட்களுக்கு முன்னுரிமையளித்து அதிக இலாபம் ஈட்டுவதற்கு முயற்சிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.**

மிளகு மீள் ஏற்றுமதி முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே விதைகள், தூள் அல்லது வேறு ஆக்கப்பெற்ற பொருட்களாக பொதியிடப்பட்ட மிளகை ஏற்றுமதி செய்யுமாறு ஜனாதிபதி விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

பெறுமதி சேர்க்கும் முறைமையை பின்பற்றி அதிக அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுஜன முன்னணியில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக நேற்று இரண்டாவது நாளாகவும் கண்டி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஹசலக்கவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.



இடைத்தரகர்களிடம் அகப்பட்டு விடாது நெல் அறுவடைகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குமாறு ஜனாதிபதி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஜ-4)

# 5 ஆம் ஆண்டு நினைவு நாள்

## அமரர் தயாநிதி கஜேந்திரன் (ராஜா)

அன்னை மடியில் 30 . 08 . 1985



அம்பிகை அடியில் 13 . 07 . 2015

**ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் அவனியில்**
**உன்னை மறப்பதுண்டோ!**
**ராஜா என அழைத்த எங்கள் தெய்வமே**
**ஆறாது என்றும் உன் நினைவுகள்.**

(3277)

திதி வெண்பா

ஆண்டு மன்மத ஆனி மாத திங்கள் அன்று காண்தகு
அமரபக்க திரயோதசி திதி தன்னில் கஜேந்திரன் சென்றனன்
விண்ணுலகம் எமை மீளாத்துயரில் ஆழ்த்தி.

"இந்திரப் பிரஸ்தம்"
கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

## கொரோனா பரிசோதனைகளிலிருந்து விலகும் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வுகூடம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பாக மேற்கொண்டு வரும் பரிசோதனைகளில் இருந்து விலகுவது என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆய்வுகூட அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

தமது ஆய்வுகூடம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் நபர்களை. அரசாங்கம் தனது இறுதி அறிக்கையை தயாரிக்கும் போது உள்ளடக்காத காரணத்தினால். தாம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அண்மையில் கொழும்பு, ஜிந்துப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த நபருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்லைக்கழகத்தின் மருத்துவ ஆய்வுகூடம் உறுதிப்படுத்தி இருந்தது. எனினும் பின்னர் அந்த நபர் கொரோனா நோயாளி அல்ல என அரசாங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பிரதான குற்றவாளிகளின் புகலிடமாக மாறும் நாடாளுமன்றம்

## அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் உள்ள பிரதான குற்றவாளிகள் மறைந்திருக்கும் இடமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது என தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். நாட்டு மக்கள் நாடாளுமன்றத்தில் இருப்பவர்களை வெறுப்புடன் பார்ப்பதற்கு இதுவே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

எது எப்படி இருந்த போதிலும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள். இதனால், அதற்கான பொறுப்பு மக்களுக்கு இருப்பதாகவும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# மரண அறிவித்தல்

## அமரர் வைத்திலிங்கம் செல்லமுத்து

பிறப்பு 05.05.1950 இறப்பு 11.07.2020

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.69, சிவநகர் உருத்திரபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அமரர். வைத்திலிங்கம் செல்லமுத்து அவர்கள் 11.07.2020 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் ஆறுமுகம் -சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பறுவதம், பொன்னம்மா (கனடா), வள்ளிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற சிவபாக்கியம், இலட்சுமன்னன் (முன்னாள் கிளை முகாமையாளர் கரைச்சி MPCS), சுந்தரராசா (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நடராசா, காலஞ்சென்ற ஆனந்தமூர்த்தி, சாந்தலிங்கம், ஞானசக்தி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, நடேசன், நடேஸ்வரி, பாக்கியம், தவமணி மற்றும் தனலட்சுமி, தியாகராசா (France) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் உமாசங்கர், சாந்தரூபி (Canada) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.07.2020 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

(3289)

தகவல்:

இல.69,சிவநகர், உருத்திரபுரம்.

சகோதரர்கள்: திரு.நா.திருநாவுக்கரசு (ராசு), திரு.நா.இலட்சுமன்னன், திரு.நா.சுந்தரராசா,
பெறாமகன்: திரு.ஆ.சிவனேசன்.

# பாரதம்

## இந்திய எல்லையில் ஊடுருவ 300 தீவிரவாதிகள் திட்டம்

### இராணுவ அதிகாரிகள் எச்சரிக்கை



(டில்லி)

இந்திய எல்லையில் ஊடுருவுவதற்காக பாகிஸ்தானில் தீவிரவாதிகள் காத்திருப்பதாக இந்திய இராணுவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அதற்கமைய தக்க சமயம் பார்த்து ஊடுருவதற்காக ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்ட 250 அல்லது 300 தீவிரவாதிகள் காத்திருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில நாட்களில் தீவிரவாதிகள் எல்லை தாண்டி வரலாம் என்று எல்லை பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இராணுவ மேஜர் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ், இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகவும் தீவிரவாதிகளிடமிருந்து பல இலட்சம் ரூபாய் மதிப்புடைய இந்திய பாகிஸ்தான் பணம் மற்றும் ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்திய எல்லையில் ஊடுருவ தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## ஐவரிகோஸ்ட் பிரதமர் உயிரிழப்பு



(ஐவரிகோஸ்ட்)

ஆபிரிக்காவில் உள்ள ஐவரிகோஸ்ட் நாட்டின் பிரதமரான அமோடோ கோன் கோலிபாலி உயிரிழந்துள்ளார்.

அந்நாட்டில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட பின்பு நோய்வாய்ப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு மாதங்களாக பிரான்ஸில் தங்கியிருந்து இதய சிகிச்சை எடுத்துக் கொண்ட கோலிபாலி அண்மையில் ஐவரிகோஸ்ட் திரும்பினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் கோலிகாலி உடல்நலக் குறைவால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கான மனித பரிசோதனையை திட்டமிட்டுள்ள தாய்லாந்து

(பாங்கொக்)

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த கண்டுபிடித்த தடுப்பூசி பரிசோதனையை எதிர்வரும் நவம்பர் மாதம் மனிதர்களிடையே பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தாய்லாந்தின் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் அடுத்த ஆண்டு பிற்பகுதியில் பயன்படுத்த தயாராக இருக்கும் வகையில் 10,000 அளவுகள் தயாரிக்கப்படுவதாகவும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த தடுப்பூசியின் பரிசோதனைகள் விலங்குகளிடையே சாதகமான முடிவுகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக மனித சோதனைகளுக்கான தடுப்பூசி அளவுகளை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸிற்கு எதிரான அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் சீனாவில் சினோவாக் பயோடெக் லிமிடெட், பரிசோதனை தடுப்பூசி மூலம் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சோதனைகள் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டால், தாய் நிறுவனமான பயோநெட்-ஆசியா பெரிய அளவிலான உற்பத்திக்கான அதன் வசதிகளைத் தயாரிக்கிறது என பாங்கொக்கின் சுலலாங்கொர்ன் பல்கலைக்கழக தடுப்பூசி அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளர் கியாட் ருக்ஸ்ருங்தாம் கூறியுள்ளார்.

மேலும் அனைத்தும் திட்டத்தின் படி நடந்தால், அடுத்த ஆண்டு மூன்றாவது அல்லது நான்காவது காலாண்டில் கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசி தாய்லாந்திற்கு தயாராக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## பிரேசிலில் கொரோனா தாண்டவம் ஒரேநாளில் 1,071 பேர் பலி!

(பிரேசிலியா)

பிரேசிலில் நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஆயிரத்து 71 பேர் உயிரிழந்துள்ளதாக அந் நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக கொரோனா வைரஸ் காரணமாக உலகில் 2 ஆவது அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்புக்கள் பதிவாகிய நாடக பிரேசில் காணப்படுகின்றது.

இதேவேளை 36 ஆயிரத்து 474 பேருக்கு நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கையும் 18 இலட்சத்து 40 ஆயிரத்து 812 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் அங்கு இதுவரை உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 71 ஆயிரத்து 492 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ-4)

## கொரோனா மனிதனிடம் இருந்து மனிதனுக்கு பரவும் என்பது சீனாவுக்கு முன்பே தெரியும்

### பெண் விஞ்ஞானி பகீர் தகவல்



(பீஜிங்)

கொரோனா பாதிப்பு குறித்து சீன அரசுக்கு முன்னரே தெரியும் என ஹொங்கொங் பெண் விஞ்ஞானி தெரிவித்துள்ளது அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் முதன்முதலில் கண்டறியப் பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியாமல் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடே தடுமாறி வருகிறது. கொரோனா வைரஸ்க்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் பணியில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் கணிசமாக கொரோனா பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் அமெரிக்கா, பிரேசில், இந்தியா ஆகிய நாடுகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. உலக அளவில் இதுவரை கொரோனா உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 28 இலட்சத்து 49 ஆயிரத்து 435 ஆக உள்ள நிலையில், உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 5 இலட்சத்து 67 ஆயிரத்து 783 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா பற்றிய தகவல்கள் முன்னரே சீன அரசுக்குத் தெரியும் என சீனாவை சேர்ந்த பெண் விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹொங்கொங்கில் இருக்கும் வைராலஜி மற்றும் நோய் எதிர்ப்புத்துறையில் நிபுணத்துவம் பெற்ற லி மெங் யான் என்ற பெண் விஞ்ஞானி நேற்று முன்தினம் பாக்ஸ் நியூஸ்க்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் இந்த அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் "கடந்த ஆண்டு டிசெம்பரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் பற்றி சீன அதிகாரிகளுக்குத் தெரியும். கொரோனா தொடர்பாக உலகத்துக்கும் உலக சுகாதார நிறுவனத்துக்கும் உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்க வேண்டிய கடமை சீனாவுக்கு இருந்தது.

அப்போதே வைரஸ் பரவலில் கவனம் செலுத்தியிருந்தால் இன்று பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம். வைரஸ் தொடர்பாக சீனாவில் ஆராய்ச்சி செய்ய ஹொங்கொங் உள்ளிட்ட வெளி நாட்டினருக்கு அனுமதியளிக்க அந்நாட்டு அரசு மறுத்துவிட்டது.

உலக சுகாதார அமைப்புடன் இணைந்திருக்கும் தனது சொந்த நிறுவனம், கொரோனா பற்றி மௌனமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டதாக வைத்தியர் யான் கூறினார். அதனைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற முடிவு செய்து ஏப்ரல் 28 ஆம் திகதி கேத்தே பசுபிக் விமானம் மூலம் அமெரிக்கா வந்தடைந்தேன்.

சீன அரசிடம் நான் பிடிபட்டால் மிகவும் மோசமாகச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பேன் அல்லது பிறரைப் போலவே நானும் காணாமல் போயிருப்பேன். சீனாவின் முக்கிய ஆராய்ச்சி மையத்தில் தொழில் புரிந்த என்னுடைய தோழி கொரோனா வைரஸ் மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும் தொற்று நோய் என்பதை கண்டறிந்துள்ளதாக தெரிவித்தார். சீனா இதை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு டிசெம்பர் 31 ஆம் திகதியே கண்டுபிடித்ததாக அவர் தெரிவித்தார்.

கொரோனா தொடர்பான செய்தியை உலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் அமெரிக்கா வந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

உலக சுகாதார மையத்தின் நிபுணர்கள் குழு கொரோனா நோய்த் தொற்றின் அறிமுகம் குறித்து கண்டறிய சீனா சென்றுள்ள நிலையில், தற்போது இந்த கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. (ஜ-4)

# வெளிநாடு

# சீனாவில் வெள்ளப்பெருக்கு 140 பேர் உயிரிழப்பு!

(பீஜிங்)

**சீனாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு போன்ற விபத்துக்களில் சிக்கி 140 பேர் உயிரிழந்துள்ளனர்.**




கொரோனா வைரஸ் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஹூபேய் மாகாணம் உட்பட சீனாவின் பல்வேறு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

அன்ஹூய், ஜிஅங்ஜு, ஹூஜுயங் உள்ளிட்ட மாகாணங்களிலும் கனமழை தீவிரமடைந்து வருகிறது. இந்த கனமழை காரணமாக பல்வேறு மாகாணங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளப் பெருக்கு காரணமாக ஆயிரக் கணக்கான வீடுகள் வெள்ள நீரில் சூழ்ந்துள்ளன. வீதிப் போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் தடைப்பட்டுள்ளன.

மேலும், 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சீனாவில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு போன்ற விபத்துக்களில் சிக்கி இதுவரை 140 பேர் உயிரிழந்துள்ளனர் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். இவர்களில் சிலர் நிலச்சரிவுகளில் சிக்கி மாயமாகியுள்ளதாகவும் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சீனாவில் ஏவப்பட்ட ராக்கெட் தோல்வியில்



(பீஜிங்)

சீனாவில் 3 ஆண்டுகள் கால தாமதத்திற்கு பின் நேற்று முன்தினம் ஏவப்பட்ட ராக்கெட் தொழில் நுட்பக்கோளாறு காரணமாக தோல்வியில் முடிவடைந்தது.

சீனா தனது விண்வெளித்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் குறைவான செலவுடைய எரிபொருள் மூலம் அதிக எடையை சுமந்து செல்லக்கூடிய செயல்திறன் கொண்ட குஐசூ-11 என்ற ரொக்கெட்டை 3 ஆண்டுகளுக்கு முன்னதாகவே விண்ணில் ஏவ திட்டமிட்டிருந்தது. ஆனால் பல்வேறு காரணங்களால் ரொக்கெட் ஏவும் முயற்சி தடைப்பட்டு வந்தது.

இந்நிலையில், 3 ஆண்டுகள் கால தாமதத்திற்கு பின்னர் நேற்று முன்தினம் ரொக்கெட்டை விண்ணில் ஏவ அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இந்த ரொக்கெட் மூலம் 6 செயற்கைகோள்களையும் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டிருந்தது.

இதையடுத்து, சீனாவின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ரொக்கெட் ஏவுதளத்தில் குஐசூ-11 ரொக்கெட்டை ஏவும் பணிகள் நடைபெற்றது. ரொக்கெட் நேற்று முன்தினம் 12.30 மணியளவில் விண்ணில் ஏவப்பட்டது.

ஆனால், ஏவுதளத்தில் இருந்து விண்ணைநோக்கி சிறிது தூரம் சென்ற ரொக்கெட் தொழில் நுட்பக்கோளாறு காரணமாக தோல்வியடைந்துவிட்டதாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. ரொக்கெட் விண்ணில் வைத்து வெடித்து சிதறியதா? அல்லது தரையில் விழுந்து தோல்வியடைந்ததா? என்ற தகவல் வெளியாகவில்லை. (ஜ-2)

## முதல்முறையாக மாஸ்க் அணிந்த ட்ரம்ப்

(வோஷிங்டன்)

உலக சுகாதார மையம் வலியுறுத்திய நிலையிலும் இதுவரை முகக்கவசம் அணியாமல் இருந்த டொனால்ட் ட்ரம்ப் முதன்முறையாக மாஸ்க் அணிந்துள்ளார்.



கொரோனா வைரஸ் ஒரு தொற்று நோய் என்பதால் அதில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிய வேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் தும்மினால், அல்லது இருமினால் அவர்களிடம் இருந்து நமக்கு நோய் தாக்காது என்று உலக சுகாதார மையம் தெரிவித்திருந்தது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடக்கத்தில் இருந்து மாஸ்க் அணிய மறுத்து வந்தார். அவருடன் நெருங்கிய அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று வைரஸ் உறுதி செய்யப்பட்டிருந்த நிலையிலும் மறுத்துவிட்டார்.

அவரது மனைவி மாஸ்க் அணியும் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ஆனால் தினந்தோறும் பத்திரிகையாளர்களை சந்திக்கும் போது ட்ரம்ப் மாஸ் அணிவதில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் காயம் அடைந்த இராணுவ வீரர்களை சந்தித்து ஆறுதல் கூறச் சென்றார். அப்போது முதன்முறையாக மாஸ்க் அணிந்து சென்றார். (ஜ-4)

## 8,000 இற்கும் அதிகமான கைதிகளை விடுவிக்கவுள்ளதாக கலிபோர்னியா அறிவிப்பு




(கலிபோர்னியா)

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து 8,000 இற்கும் அதிகமான கைதிகளை விடுவிக்கவுள்ளதாக கலிபோர்னியா அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெரிவித்துள்ள கலிபோர்னியா சிறைத்துறை அதிகாரிகள், கலிபோர்னியாவில் 8,000இற்கும் அதிகமான சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கான தகுதியுடன் உள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

மேலும் கொரோனா நெருக்கடி காலத்தில் முன்னர் எடுத்த நடவடிக்கைகளின்படியே இதுவும் எடுக்கப்படவுள்ளது என்றும் சிறையில் தடுத்து வைத்துள்ள நபர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவல் நீடித்து வந்தபோதிலும் கடந்த மாதத்தில் அமெரிக்காவில் உணவு விடுதிகள், மதுபானக் கூடங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், தேவாலயங்கள் என்பன டெக்சாஸ், அரிசோனா உள்ளிட்ட மாகாணங்களில் திறக்கப்பட்டன. இதனால் மக்கள் புழக்கம் அதிகரித்தது.

குறிப்பாக புளோரிடா, டெக்சாஸ், அரிசோனா, கலிபோர்னியா ஆகிய மாகாணங்களில் அதிக எண்ணிக்கையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. கலிபோர்னியா, நியூயோர்க், டெக்சாஸ், புளோரிடா மாகாணங்களில் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சிறைச்சாலைகளில் சட்டத்தரணிகளின் உரிமைகளை மீறும் வகையிலான நடைமுறைகள் திருத்தப்பட வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் சட்டத்தரணிகளின் தொழில்சார் உரிமைகளை மீறும் வகையிலான நடைமுறைகளைத் திருத்திக்கொள்வதற்கு விரைந்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்தில், சட்டத்துறை உறுப்பினர்களின் தொழில்சார் உரிமைகள் மீறப்பட்டமைக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவோம் என்று சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இதுகுறித்துத் தெளிவுபடுத்தி சட்டத்தரணிகள் சங்கத்தினால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும் சட்டத்தரணிகளின் தொழில்சார் உரிமைகளை மீறும் வகையிலான நடைமுறைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் பலரிடமிருந்தும் எமக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சட்டத்தரணிகள் அவர்களது கடமைகளைச்செய்வதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். மிக அவசியமான தேவைகள் தவிர்த்து அவர்கள் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படக்கூடாது. சட்டத்தரணிகள் சிறைச்சாலைகளுக்குள் நுழைவதால் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டிருப்பதாக எந்தவொரு குற்றச்சாட்டுக்களும் பதிவாகவில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அதனைவிடவும் சட்டத்துறைசார் அதிகாரிகளை அதற்குரிய கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடத்துவது அவசியமாகும்.

மேலும் சிறைச்சாலைகளுக்குள் அவசியமேற்படுத்தும் பட்சத்தில் சட்டத்தரணிகள் தமது தரப்பு வாதிகளுடன் தனியாகக் கலந்துரையாடுவதற்கும், விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதியளிக்கப்பட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் விசேட அதிரடிப் படையினரோ அல்லது சிறைச்சாலை அதிகாரியோ அருகிலிருப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

இவற்றைத் திருத்திக் கொள்வதற்கு விரைந்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்தில், சட்டத்துறை உறுப்பினர்களின் தொழில்சார் உரிமைகள் மீறப்பட்டமைக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவோம் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# பேருந்து உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது



(கொழும்பு)

நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த பேருந்து வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானித்துள்ளதாக பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு ஒரு வார காலத்திற்குள் தீர்வு வழங்கப்படவில்லை எனின் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இரண்டு துப்பாக்கிகளுடன் சிக்கிய பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

பிடிபன பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு காணாமல் போனதாக தெரிவிக்கப்படும் ரி-56 ரக துப்பாக்கிகளில் மேலும் இரண்டு துப்பாக்கிகள் ஹோமாகம பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரியின் வீட்டில் இருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹோமாகம, பிடிபன பகுதியில் பாதாள உலகக் குழுவின் நவீன துப்பாக்கிகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட வழக்குடன் தொடர்புடைய, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போதே அவரிடமிருந்து இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகளும் மீட்கப்பட்டன. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கை கட்டும் பழக்கம்!

நாங்கள் ஒருத்தர் முன்னாடி நின்று பேசிக்கொண்டு இருக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்! கொஞ்ச நேரம் அவர் இயல்பாக நின்று கேட்டுக் கொண்டு இருக்கின்றார்.... அதற்குப்பிறகு மெதுவாக கைகளைக் கட்டிக்கொண்டு கேட்க ஆரம்பிக்கின்றார் என்றால் அவர் எங்கள் பேச்சை மரியாதையாகக் கேட்கின்றார் என்று அர்த்தம் பண்ணக்கூடாது.மரியாதையாக நாங்கள் பேசுவதை நிறுத்தச் சொல்லுகின்றார் என்று அர்த்தம்.அந்த உடல் மொழியைப் புரிந்து கொள்ளாமல் நாங்கள் பாட்டுக்குப் பேசிக்கொண்டு இருக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்... அவருக்கு எங்கள் மேல் ஒரு வெறுப்பு வந்து விடும்.எங்கள் முன்னாடி இருக்கின்றவர் கைக்கட்டை அவிழ்ப்பதற்கு சில தந்திரங்கள் உண்டு.பேச்சுக்கு மத்தியிலே அவரிடம் ஒரு பேனாவைக் கொடுங்கள் அல்லது புத்தகத்தைக் கொடுங்கள்.அவருடைய கை பிரியும்.மறுபடியும் உங்கள் பேச்சை அவர் கவனமாகக் கேட்பார். மறுப்புச் சிந்தனை நீங்கும்.ஏற்புச்சிந்தனை வந்து விடும்.

ஒருத்தர் பலமாக கையைக் கட்டிக்கொண்டு இருக்கின்றார் என்றால் அவர் மனசிலே என்ன நினைப்பு மறைந்திருக்கும் தெரியுமா? நான் தனி....சேர விரும்பவில்லை, எனக்கு இந்த சூழ்நிலை இயல்பாகவில்லை... பிடிக்கவில்லை. இது மாதிரி மறுப்பு எண்ணத்தின் ஒட்டு மொத்தத் தொகுப்புத்தான் கை கட்டுவது. மனோதத்துவ நிபுணர்கள் அப்படித்தான் சொல்லுகின்றார்கள். இரண்டு கைகளைக் கட்டுகின்ற போது எதிலேயோ இருந்து தப்பிக்கொள்வதற்கு ஒரு பாதுகாப்பு கிடைத்தது மாதிரி ஒரு உணர்வு கிடைக்கின்றது.நம்முடைய கைகள் எங்கள் உடம்புக்கு முன்னாடி இருக்கின்றதனால் ஒரு தற்பாதுகாப்பு அல்லது கவசம் மாதிரி அது நமக்குத் தெரிகின்றது.இந்தப் பழக்கம் நமக்கு எப்படி ஆரம்பிக்கின்றது தெரியுமா?

சின்ன வயதிலே ஏதாவது தப்புப்பண்ணி விட்டு அம்மாவுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்வது, ஒரு கதவுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்வது, இந்தப் பழக்கம் பிறகு நாங்கள் வளர்ந்த பிறகு...எங்களை மறைப்பதற்கு முன்னால் எதுவும் இல்லை.அதனால் கையை முன்னால் கொண்டு வந்து கட்டிக் கொள்கின்றோம். கையையே ஒரு மறைப்பாக உபயோகப்படுத்துகின்றோம்.அதனால் இப்பவும் ஒரு கும்பலிலே கையைக்கட்டிக்கொண்டு இருந்தோம் என்றால் நாங்கள் ஒரு பெரிய பாதுகாப்பிற்கு உள்ளே இருக்கின்றதாக உங்களுடைய உள் மனது நினைத்துக் கொள்கின்றது!

அச்சுறுத்துகின்ற சந்தர்ப்பங்கள், பதற்றம், பலர் முன்னால் நிற்க வேண்டிய சூழ்நிலை, மேடை இது மாதிரி இடங்களிலே எங்கள் கைகளை மார்பினிலே கட்டிக்கொண்டால் மனதிற்கு ஒரு நிம்மதி!

பிடிக்காத இடம், பிடிக்காதவர் மத்தியிலே நிற்கவேண்டிய சந்தர்ப்பம், பிடிக்காத சூழ்நிலை இது மாதிரி நேரங்களிலே முன் கை கட்டுவது வழக்கமான அறிகுறி. நான் அப்படி இல்லை என்று எங்களுக்கு இப்பொழுது தோன்றலாம்....இருந்தாலும் எங்களுடைய உள்மனது அப்படித்தான் நினைக்கின்றதாம்!

ஒரு மேலதிகாரி அல்லது தன்னை மேலானவராக நினைத்துக் கொள்கின்ற ஒருத்தர்....ஒரு பணியாளரைப் பார்க்கின்ற போது முன் கையைக் கட்டமாட்டார்.பின்னாடி கையை கோர்த்துக்கொண்டு நிமிர்ந்து நிற்பார்.அவருடைய மார்புக்கு அப்போது பாதுகாப்புத் தேவைப்படவில்லை.கைகளை பொக்கட்டிலே கூட விட்டுவிடுவார்.ரொம்ப தைரியமாக இருக்கின்றதாக அவர் காட்டிக் கொள்கின்றார்.

ஒரு பொலிஸ் அதிகாரி....இடுப்பிலே துப்பாக்கி வைத்திருக்கின்றார்.அவர் கைகட்ட மாட்டார்.ஏன் என்றால் துப்பாக்கி இருக்கின்ற நினைப்பு மனதிலே தைரியத்தைக் கொடுத்து விடுகின்றது. ஒரு நிபுணர் ஒரு கூட்டத்திலே பேசுகின்றார்.வேண்டும் என்றே அவர்கள் உணர்ச்சியைப் பாதிக்கின்ற மாதிரி பேசுகின்றார்.ரொம்ப அவசரமாக அவர் பேசப்பேச 90 சதவீதம் பேர் கையைக் கட்டிக் கொண்டிருந்தார்களாம்!

சும்மா அப்படி விளையாட்டுக்குச் சொன்னேன் என்று இவர் சொன்னதும் எல்லோரும் சிரித்துக்கொண்டு கையை எடுத்து விட்டார்களாம்!எங்கள் மனசு என்ன நினைக்கின்றது என்கின்றதை நமக்குத் தெரியாமலே நம்முடைய உடம்பு வெளிப்படுத்தி விடுகின்றது.அதனாலே தான் இதை மெய்ப் பொருள் என்று சொல்லுகின்றார்கள்.

ஒரு வகுப்பினிலே கைகட்டாமல் பாடம் கேட்கின்றவர்களை விட கை கட்டிக் கொண்டு பாடம் கேட்கின்றவர்கள் 38 சதவீதம் குறைவாகத் தான் பாடத்தை கவனித்து இருக்கிறார்கள் என்கின்றது ஒரு சோதனை மூலமாக தெரிய வந்திருக்கின்றது.மேடையிலே பேசுகின்ற போது கூட எதிரே உள்ளவர்கள் நிலைமையை கவனித்துப் பார்க்க வேண்டும். நிறையப் பேர் கையை கட்ட ஆரம்பித்தார்கள் என்றால் உங்கள் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அர்த்தம்.ஒரு பேச்சாளர் சொன்னார்.நான் ஆயிரம் பேர் கூடியிருந்த ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டு இருந்தேன். முதல் வரிசையிலே உட்காந்து கொண்டிருந்த ஒரே ஒரு ஆள் மட்டும் தான் கைகட்டிக்கொண்டு இருந்தான். அதைப்பார்த்த உடனே பேச்சை முடித்து விட்டு கீழே இறங்கி விட்டேன்! என்றார்.

ஒரு ஆளுக்காக பேச்சை நிறுத்த வேண்டுமா? என்று கேட்டேன். அந்த ஆள் கையை கட்டிக்கொண்டு இருந்ததால் மட்டும் நான் பேச்சை நிறுத்தவில்லை. அப்படி கட்டி இருந்த கையிலே ஒரு அழுகிய முட்டையை வேறு வைத்திருந்தான்.அதைப் பார்த்ததும் தான் நான் சடார் என்று பேச்சை முடித்து விட்டு கீழே இறங்கி விட்டேன்! என்றார்.

## எம்.சி.சி.யில் கைச்சாத்திடுவது உறுதி

# சோபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் நாட்டிற்குள் அமெ.இராணுவம் சீருடையுடன் நுழையலாம்

### நளிந்த சாடல்



(கொழும்பு)

**நாடாளுமன்ற தேர்தல் நிறைவு பெற்றவுடன் எம்.சி.சி .ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திடும் என்று களுத்துறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது அரசாங்கம் சோபா ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுவதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும், அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அமெரிக்க இராணுவம் சீருடையுடன் இலங்கைக்குள் நுழைய முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் அவர்கள் நாட்டுக்குள் கொண்டுவரும் எந்தவொரு பொருளையும் சோதனையிடும் அதிகாரம் இலங்கைக்கு கிடைக்காதெனவும் கூறினார்.

எமது நாட்டின் சட்டத்துக்கு பணிய வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்காதெனவும் தெரிவித்த அவர், அந்த சோபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான இலஞ்சமாகவே எம்.சி.சி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது என்றும் சாடினார். (ஜ-4)

# கொரோனாவின் 2 ஆம் கட்ட பாதிப்புகளுக்கு அரசாங்கம் தான் பொறுப்புக்கூற வேண்டும்

### சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாவின் 2ஆம் கட்ட பாதிப்புகளுக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அக்குரஸ்ஸயில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் வரையில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று நாங்கள் தெரிவித்தோம்.

எனினும், ஆளும் தரப்பினர் நாங்கள் தேர்தலுக்கு அச்சம் கொண்டே இவ்வாறு தெரிவிப்பதாக காண்பித்து வந்தனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்த போதும் அதனையும் ஆளும் தரப்பினர் கடுமையாக விமர்சித்தனர்.

இந்நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மக்களின் சுகாதார பாதுகாப்பையும் கருத்திற் கொள்ளாது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்தனர்.

வைரஸ் பரவலின் இரண்டாம் கட்ட அலை தொடர்பாக தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. இதில் மக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கமே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்" என அவர் வலியுறுத்தினார். (ஜ-4)

# 2 ஆம் கட்ட கொரோனா அச்சுறுத்தலுக்கு இடமளிக்கமாட்டோம்-கமால் குணரத்ன



(கொழும்பு)

நாட்டில் 2ஆம் கட்ட கொரோனா அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோமென பாதுகாப்புச் செயலாளர் முன்னாள் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொக்காவில் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன எனவும் கமால் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் அனைத்து மக்களும் அச்சமின்றி சந்தோசமாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# விடுவிக்கப்பட்ட கைதிகளை மீள அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீள சிறைக்கு அழைத்து பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருவர் கொரோனா தொற்றிற்கு இலக்கானதை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இந்தக்காலகட்டத்தில் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட 62 கைதிகளையும் மீள சிறைச்சாலைக்கு அழைத்து, பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (ஜ-4)


பாராளுமன்றத் தேர்தல்-2020
யாழ்.கிளிநொச்சி மாவட்டம்

தமிழ் தேசியத்தின் உறுதிமிக்க பயணத்திற்கான
எதிர்பார்ப்பு..! மாற்றம்..! நம்பிக்கை..!

தபால் மூல வாக்காளப் பெருமக்களே!
நீங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் உறுதிமிக்க நம் தேசியப் பயணத்திற்காகவும் எம் இனத்தின் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதற்கும்



உங்கள் தெரிவு
குருசுவாமி சுரேந்திரன். MBA
(சுரேன்)
X 5
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
ஆதரவாளர்கள்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

20

கலாநிதி முருகர் குணசிங்கம்

1962 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட "பொதுநலவாயக் குடிவரவுச் சட்டம்" **(The Common wealth Immigration Act)** மேலும் அதிகளவில் ஈழத் தமிழர்களைப் பிரித்தானியாவிற்குப் புலம்பெயர வைத்தது.

குறிப்பாக ஆங்கிலக் கல்வி கற்ற வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்ட வல்லுநர்கள், சிறப்புப் பயிற்சி பெற்ற தாதிகள், வணிகர்கள் போன்ற துறைசார் வல்லுநர்கள், இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள் அவர்களைத் தள்ளுகின்ற காரணியாக அமைய, பிரித்தானியாவின் செல்வச் செழிப்பு, வேலைவாய்ப்பு, நவீன மருத்துவ வசதிகள், உயர்கல்வி வாய்ப்பு, வசதியான வாழ்க்கை, பாதுகாப்பான அரசியல் நிலைமை, தனிமனித சுதந்திரம் என்பன அவர்களை இழுக்கும் சக்தியாக அமைந்தன.

அத்தோடு பிரித்தானிய சீமைக்குச் சென்று வாழ்கின்ற, துணியில் அழுக்குப்படாத தொழில் **(White Collar Job)** புரிகின்ற, மேல் நாட்டு மோகம், ஆங்கிலமொழி மோகம், சமுதாய மதிப்பு மரியாதை போன்ற தனிமனித ஆசைகளும் ஈழத்தமிழர்களைப் பிரித்தானியாவை நோக்கிப் புலம்பெயரச் செய்தன.

இதன் விளைவாக 1964 இல் இருந்து பெரும் எண்ணிக்கையிலான ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தமையை அறிய முடிகின்றது. அதற்குப் பிறகு, குடியேறும் முயற்சிகளில் சில தடைகள் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

1968 இல் பிரித்தானிய அரசு தனது குடிவரவுக் கொள்கையில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்தது. உதாரணமாக 1968 இன் குடிவரவு சட்டமும் **(Immigration Act of 1968)** 1971 இன் குடிவரவுச் சட்டமும் **(Immigration Act of 1971)** பிரித்தானியாவில் குடியேறி நிரந்தரமாக வதிவிடம் பெற்று வாழ முயற்சிப்பவர்களை வெகுவாகத் தடுத்து நிறுத்தின.

இருந்தும் ஏற்கனவே அங்கு குடியேறிய ஈழத்தமிழர்கள் தமது குடும்பங்களையும் இரத்த உறவினரையும தம்மோடு மீளிணைப்பதில் பின்னிற்கவில்லை.

அத்தோடு உயர் கல்வியின் பொருட்டு பிரித்தானியா சென்ற ஈழத்தமிழர்களும் 1977 இன் பின்னரான இலங்கையின் அரசியல் நிலைமை காரணமாக அங்கு திரும்பிச் செல்லாது பிரித்தானியாவிலே அகதிச் சான்றிதழ் பெற்று நிரந்தரமாகத் தங்கி விட்டனர்.

இவ்வாறு தொழில், கல்வி, குடும்ப மீள் இணைவுகளின் அடிப்படையில் பிரித்தானியாவில் வதிவிட உரிமை பெற்று நிரந்தரமாக வாழ்ந்த நிலைமையில் இருந்து 1980களைத் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கில் ஈழத்தமிழர்கள் பிரித்தானியாவுக்கு அகதிகளாகச் செல்கின்ற புலம்பெயர்வு தொடங்குகின்றது.

1981, 1983 இல் சிங்கள இராணுவப் படைகளாலும் சிங்களக் காடையர்களாலும் ஈழத்தமிழர்கள் தெற்கில் உள்ள சிங்களப் பகுதிகளிலும் மத்தியிலுள்ள சிங்களப் பகுதிகளிலும் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான எல்லைப் பகுதிகளிலும் மிகவும் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொல்லப்பட்டு, பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டு, வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழில் கூடங்கள் கொள்ளையடிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, தமிழர்களின் வடக்கு, கிழக்கு தாயகப் பகுதிகளுக்கு அகதிகளாக விரட்டப்பட்டார்கள்.

2 இலட்சம் தமிழர்கள் தமிழ்நாட்டுக்குத் தப்பி ஓடித் தஞ்சம் புகுந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் மேற்கு ஐரோப்பா, ஸ்கன்டிநேவிய நாடுகள், வட அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு சென்று தஞ்சம் கோரினர்.

இதேவேளையில் தொழில், கல்வி, குடும்ப மீள் இணைவு, உயர்கல்வி போன்றவை காரணமாக பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்களையும் 1980களில் இருந்து தொடர்ச்சியாக அகதிகளாகச் சென்றவர்களின் தொகை பற்றி நோக்குவது பொருத்தமாகும். பிரித்தானியாவில் எத்தனை ஈழத் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்று சரியாகக் கணக்கெடுப்பதில் ஏனைய முன் குறிப்பிட்ட நாடுகள் போல் பல சிக்கல்கள் இருக்கின்றன.

காரணம் பிரித்தானிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் இன அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதில்லை. நாடுகளின் அடிப்படையிலும் மத அடிப்படையிலும் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் மக்கள் தொகைக் கணக்கு சேகரிக்கப்பட்டு இருக்கிறது.

2011 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பில் இலங்கை பற்றிய மக்கள் தொகை, ஆசியக்கண்டத்தின் கீழ் "இந்தியா" என்ற உட்தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

பிரித்தானியாவில் வாழும் பிற நாட்டில் பிறந்தவர்கள் என்ற பகுப்பின் கீழ் மக்கள் தொகைக் கணக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கையில் பிறந்தவர்கள் என்ற பகுப்பினுள் பதியப் பெற்றுள்ளது. அதன்படி 1991 இல் மக்கள் தொகை பதிவுகளின் படி 39,402 பேரும் 2001 ஆம் ஆண்டு பதிவுகளின் படி 67,832 பேரும் பதிவாகி இருக்கின்றனர்.

ஆனால் இவர்களுள் சிங்களவர்களும் முஸ்லிம்களும் அடங்குவர். பிரித்தானியாவில் இலங்கைப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள் பிரித்தானிய நாட்டவர் என்ற மக்கள் தொகைக்குள் பதிவாகி இருக்கின்றது.

எனவே ஈழத்தமிழர்கள் எத்தனை பேர் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட முடியவில்லை. அதேவேளையில் தொழிலாளர்கள் பற்றிய பதிவுகள் **(The Labour forces survey Department)** திணைக்களத்தின் 2006 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 102,950 பேர் இலங்கையில் பிறந்து பிரித்தானியாவில் நிரந்தரமாக வாழ்கின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இப்புள்ளி விபரங்களிலும் மேற்கூறப்பட்ட பிரச்சினையே காணப்படுகின்றது.




மேலும் மத அடிப்படையில் ஈழத்தமிழர்கள் இந்துமதம் என்ற பெரும் பிரிவினுள் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதில் இந்தியாவிலும் ஏனைய நாடுகளில் வாழும் இந்து மதத்தவர்களும் அடங்குகின்றார்கள். அதன் விளைவாக இந்து மதம் என்ற பெரும் பிரிவினுள் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதில் இந்தியாவிலும் ஏனைய நாடுகளில் வாழும் இந்து மதத்தவர்களும் அடங்குகிறார்கள். அதன் விளைவாக இந்து மதம் என்ற அடிப்படையிலும் ஈழத்தமிழர்களைப் பகுத்து அறிய முடியவில்லை.

பிரித்தானிய அகதிகள் சபை **(British Refugee Concil)** நாட்டு அலுவலகம் **(Home Office)** அளித்துள்ள புள்ளி விபரங்களின்படி 1983 இற்கு முன்னர் 30,000 தமிழர்களும் 2002 இல் 1,10,000 ஆம் இலங்கைருள் 60,000 ஆம் அகதிகளும் உள்ளடங்குவர் எனவும் புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகின்றது. இத்தகைய சிக்கலான நிலையில் பல்வேறுபட்ட ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள், இணையத்தளங்களை ஆராய வேண்டிய தேவையுள்ளது.

அத்தோடு சில அரச சார்பு அற்ற நிறுவனங்களிடம் இருந்து பெற்ற தரவுகளையும் கருத்திற் கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

மேற்படி ஆதாரங்களின் வழியாக பிரித்தானியாவில் அண்மைக்காலம் வரை சுமார் இரண்டு இலட்சம் ஈழத் தமிழர்கள் வாழ்கின்றார் கள் என அறிய முடிகின்றது.

கடந்த 12 ஆண்டுகளில் மட்டும் சுமார் 90,000 இற்கும் மேலான ஈழத் தமிழர்கள் பிரித்தானியாவுக்கு அகதிகளாகவும் குடும்பத்தில் மீள் இணைவதன் பொருட்டும் திருமணத்தின் மூலமும் வந்து இருக்கின்றார்கள் என ஊகிக்க முடிகின்றது.

1993 இற்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் **(European Union)** அமைக்கப்பட்டதில் இருந்து பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, இத்தாலி போன்ற ஆங்கிலமொழி பேசாத நாடுகளில் இருந்த பல ஈழத் தமிழர்கள் தமது பிள்ளைகளை ஆங்கில மொழியில் கல்வி கற்பிப்பதற்காக பிரித்தானியாவில் சென்று வாழத் தொடங்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே மேலே கூறப்பட்ட பல்வேறு அரசு அரச சார்பு அற்ற அறிக்கைகளின் ஊடாகவும் ஏனைய மேற்குறிப்பிட்ட ஆதாரங்களைக் கொண்டும் சுமார் 150,000 - 180,000 இற்கும் இடைப்பட்ட அளவில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்கின்றனர் எனக் கூறலாம்.

அவர்களுள் பெரும்பான்மையினர் லண்டன் மாநகரில் தான் வாழ்கின்றார்கள். குறிப்பாக வெம்பிளி, ஹரோ, வால்த்தம்ஸ்ரோ, மில்டன் குறைடன், சர்ரே, ரூட்டிங், லுசியம், சவுத்தோல் போன்ற இடங்களில் செறிந்து வாழ்வதையும் பார்க்க முடிகின்றது. அண்மைக் காலமாக ஈழத்தமிழர்கள் புறநகர்ப் பகுதிகளை நோக்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

### பிரான்ஸ்

இதுவரை கவனத்திற் கொள்ளப்பட்ட நாடுகளுள் இந்தியா தவிர ஏனைய நாடுகளுக்கு ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்தமைக்குத் தள்ளுகின்ற காரணிகளும் இழுக்கின்ற காரணிகளும் ஓரளவு சமபங்கு வகித்தன.

ஆனால் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் நோர்வே, டென்மார்க், சுவீடன் போன்ற ஸ்கண்டிநேவிய நாடுகளும் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்தோ அல்லது அகதிகளாகவோ சென்று அடையக் கூடிய அளவிற்கு அவர்களை அமோகமாக முதலில் ஈர்த்து இழுக்கும் நாடுகளாக இருந்திருக்க முடியாது.

(தொடரும்)

# நாட்டில் இரண்டாவது நீருக்கடியிலான அருங்காட்சியகம்







(திருமலை)

நாட்டில் இரண்டாவது நீருக்கடியிலான அருங்காட்சியகம் திருகோணமலையில் அமைக்கப்பட்டு கடற்படைத் தளபதி பியல் டி சில்வாவால் கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சென்டி பே கடற்கரை வருவதால், அக்கடற்கரையை அண்டியதாக இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளதாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதி பவளப் பாறைகள் உருவாகுவதை ஊக்குவிக்கும் என்பதோடு, மீன்வளத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் தற்போது இப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் மீன் இனப்பெருக்கம் ஆரம்பமாகியுள்ள நிலையில், மிக விரைவில் இப்பகுதியில் நீந்துபவர்களுக்கும் நீராடுபவர்களுக்கும் தனித்துவமானதொரு பார்வையிடும் அனுபவத்தை குறித்த அருங்காட்சியகம் வழங்கும் எனவும், கடற்படை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே காலி பகுதியில் இலங்கையின் முதலாவது அருங்காட்சியகத்தை கடற்படையினர் நிர்மாணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கரைவலையில் சிக்கிய 5000 கிலோவுக்கு மேற்பட்ட நெத்தலி மீன்கள்



(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனை கடற்கரையில் நேற்று முன்தினம் சுமார் 5000 கிலோவுக்கும் மேற்பட்ட நெத்தலி மீன்கள் கரைவரையில் பிடிபட்டன.

அத்துடன் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் பல மாதங்களுக்குப் பின்னர் இவ்வாறான அதிகளவான மீன்கள் பிடிபட்டதாக கடற்றொழிலாளர்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

தற்போதைய காலம் அதிகளவான மீன்கள் பிடிபடக்கூடிய காலமாக இல்லாத போதும் நெத்தலி மீன்கள் அதிகமாக பிடிபட்டுள்ளதால் மீன்களின் விலையும் மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களின் மீன்களின் விலை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# இணக்கமாகச் செயற்படும் கட்சிக்குள் விருப்பு வாக்கு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும்

## ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இணக்கமாகச் செயற்படும் கட்சிக்குள் விருப்பு வாக்கு முறைமை முரண்பாட்டைத் தோற்றுவிக்குமென பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.**

மாத்தறையில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது, "கடந்த நல்லாட்சி அரசாங்கம், குடும்பமொன்றை இலக்கு வைத்து 19ஆவது திருத்தத்தை அரசியலமைப்பில் கொண்டு வந்தது.

ஆனால் இந்த திருத்தம் கடந்த அரசாங்கத்தில் பல முரண்பாடுகளை தோற்றுவித்தன. இவைகளை நாம் அவதானிக்க கூடியதாகவும் இருந்தது.

மேலும் தற்போதைய சூழ் நிலையில் புதிய அரசியலமைப்பு மிகவும் அவசியமான தேவைப்பாடாக காணப்படுகின்றது.

ஆகவே, 19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு முரண்பாடற்ற விதத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்க தீர்மானித்துள்ளோம்" என அவர் தெரிவித்தார். (ஐ)

# பாதாள உலகக்குழு உறுப்பினரின் சகோதரி வீட்டில் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

பாதாள உலகக் குழு உறுப்பினர் கொஸ்கொட தாரகவுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர் என சந்தேகிக்கப்படும் முத்தெட்டுவட்ட ஒப்பநாயக்க என்பவரிடமிருந்து கையடக்கத் தொலைபேசியொன்றையும் கையெறி குண்டொன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கொஸ்கொட தாரகவின் சகாவான களுமல்லி எனப்படும் ரோஹான் பிரதீப் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போதே இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டதையடுத்து, தொலைபேசியையும், கைக்குண்டையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரான முத் தெட்டுவட்ட ஒப்பநாயக்க என்பவரின் சகோதரியுடைய இல்லத்தில் பின்னால் புதைக்கப்பட்ட நிலையிலேயே குறித்த கைக்குண்டும் தொலைபேசியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கொஸ்கொட தாரகவுடன் போதைப்பொருள் கடத்தல் மோசடியில் ரோஹான் பிரதீப் நேரடியாக ஈடுபட்டுள்ளார் என்பதை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அதன் பின்னர் அவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரது வங்கிக் கணக்கிலிருந்து 40 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை இருந்துள்ளதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே மீட்டியாகொட மற்றும் கஹாவாவில பகுதியில் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்குமாறும் பலபிட்டிய நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## நீதி மோசடி அறுவரும் மறியலில்

(கம்பஹா)


கம்பஹா மாவட்டத்தில் 708 மில்லியன் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கம்பஹா சனச சங்கத்தின் முன்னாள் பிரதி பொது முகாமையாளர் மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள் உள்ளிட்ட ஆறு பேரை நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2071

Search for people, places and things

### கவின்

மனிதன் உணவின்றி 40 நாட்களும் நீரின்றி 3 நாட்களும் காற்றின்றி 3 நிமிடமும் உயிர் வாழலாம். ஆனால் நம்பிக்கையின்றி 3 நொடி கூட வாழ இயலாது




### ஜானகி

யாரையும் முக்கியமாக நினைக்காததும் யாருக்கும் முக்கியமில்லாதவர்களாக இருப்பதும் தான் வாழ்வில் பெரும் நிம்மதி தரும்



### விமல்

வாழ்வின் ஒவ்வொரு முறையும் உங்களைத் தூக்கி எறிந்தவர்களுக்கு நன்றி கூறுங்கள். ஏனெனில் அவர்கள் தான் உங்களை அடுத்த கட்டத்திற்கு வளர்த்து விடுகின்றனர்



### குமுதா

வாழ்க்கை
ஒரு
விசித்திரமான
பரீட்சை
ஒவ்வொரு
விதமான
கேள்விகள்
அவரவர்
கொடுக்கும்
விடைகளை
பொறுத்ததே
வாழ்க்கை...




### கமல்

ஒன்றை அடைய வேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதிவரை போராடு... விளைவுகளையோ அதில் ஏற்படும் தோல்விகளையோ பற்றிக் கவலைப்படாதே!



### அஸ்வின்

பொண்டாட்டி என்னைத் திட்டும்போது எப்பவும் உங்க அம்மா பேச்சைத்தான் கேட்பீர்களா...? என் மகனைத் திட்டும் போது அம்மா பேச்சைக் கேட்கவே மாட்டியா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தவறுகளைத் திருத்தி அரசியலில் இளைஞர்களுக்கு முன்னுரிமை

## ரணில் உறுதி



(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் தாக்கம் தீவிரமடைந்தால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். இதனால் நாட்டில் தொழிலின்மை பிரச்சினை ஏற்படும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் உறுதியான கொள்கை கிடையாது. ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினரை உள்ளடக்கி முறையான கொள்கைகளை தற்போது வகுக்க வேண்டும்.

இளம் தலைமுறையினர் அரசியலை வெறுப்பதற்கு அரசியல்வாதிகளே காரணம். ஆகவே தவறுகளை திருத்திக் கொண்டு அரசியலில் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கத்தயார் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தலைமுறை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளம் தலைமுறையினர் அரசியலை வெறுப்பது அவர்களின் தவறல்ல. அரசியல்வாதிகளின் தவறு. எமது நாட்டின் அரசியல் செயற்பாடுகள் அந்த நிலையினை ஏற்படுத்தியுள்ளது. 2018ஆம் ஆண்டு 52 நாள் அரசாங்கத்தின் செயற்பாடுகள், பாராளு மன்றத்தில் செயற்பட்ட விதம் ஆகியவை இளைஞர்களின் வெறுப்பினை மேலும் தீவிரப்படுத்தியது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் தியவன்னா ஆற்றில் தள்ள வேண்டும் என்று குறிப்பிடல். பாராளுமன்ற உறுப்பினர்களை ஆற்றில் தள்ளினால் ஆறும், சுற்றுச்சூழலுமே பாதிக்கப்படும்.

தவறுகளை திருத்திக் கொண்டு அரசியலில் ஒன்றிணைய இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியில் இம்முறை புதிய இளைஞர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதாரம், கொவிட்-19 வைரஸ் தாக்கம் ஆகிய சவால்களை கட்டுப்படுத்த வேண்டுமாயின் முறையான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். புதிய கொள்கைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அதற்கு இளைஞர், யுவதிகள் அரசியலில் பங்குபற்ற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி புதிய தலைமுறையினருக்கு அரசியலில் முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அதனை முறையாக பயன்படுத்திக் கொள்வது இளைஞர்களின் பொறுப்பு என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# செய்தித்துளிகள்

## பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணி நீக்கம்

(கொழும்பு)

லுனாவ பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் மீனவர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் மூவரும் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சார்ஜன் ஒருவர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபர் மேற்கொண்ட உள்ளக விசாரணைகளின் அடிப்படையில் கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் உத்தரவிற்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-2)

## மாலைதீவிலிருந்து 185 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மாலைதீவில் சிக்கித் தவித்த 185 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இதனையடுத்து, அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில், விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் அவர்களை தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைதாகினர்

(கொழும்பு)

குருவிட்ட பகுதியில் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 5000 ரூபா நாணயத்தாள்கள் 21 உம், 500 ரூபா நாணயத் தாள்கள் 34 உம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

போலி நாணயத்தாள்கள் தொடர்பான புழக்கங்கள் தொடர்பில் முறையிட 011 242 2176 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஜ-4)

# ஆன்மீகம்



## ஒருநாளும் தளர்வறியா மனம் வேண்டும்!

ஆனால், புற்றுநோயால் அவதியுற்று இரண்டு முறை சாவிற்குத் திகதி குறிக்கப்பட்ட சீன்ஸ்வானர் என்பவர் சிகரத்தை அடைவதில் வெற்றி பெற்றார். இதைத்தான் " உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்கிறது நமது செந்தமிழ். விடாமுயற்சியுடன் விரைவாக ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரைத் தான் கங்கை அன்னை.,காவிரித் தாய் என நாம் புகழ்கிறோம்.

தேங்கிக் கிடந்து துர்நாற்றமடிக்கும் குட்டையைப் போற்றி ஏதாவது நாம் கூறுவோமா?விடாமுயற்சிக்குத் தான் இந்த விரிந்த வையம் விழா எடுக்கிறது.அருவி கொட்டிக் கொண்டேயிருக்கிறது. இதயம் துடித்துக் கொண்டேயிருக்கிறது. கடல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. உலக உருண்டை சுழன்று கொண்டேயிருக்கிறது. விநாடி கூட நிற்காமல் கடிகாரம் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. உயிர்ப்புடன் உலவுவதே இந்த உலகம் கற்றுத் தரும் உன்னதமான பாடம்.

'தோமஸ் அல்வா எடிசன்' என்று சொன்னாலே அனைவர் நெஞ்சிலும் ஒரு ஒளி பரவும். ஏனென்றால் மின்சார பல்பைக் கண்டுபிடித்த மேதை அவர். பல ஆண்டுகள் விடாமுயற்சியுடன் உழைத்து உழைத்து பின் மின்சார விளக்கைக் கண்டுபிடித்து தன் முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சோதனைகளில் தோல்வி கண்டு பின் 1201 ஆவது முயற்சியில் தான் அவரால் வெற்றி பெற முடிந்தது. அவர் தோல்வியில் துவண்டு தன் விடாமுயற்சியைக் கைவிட்டிருந்தால் இன்று உலகமே இருளில் தான் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்குமோ? எடிசன் இறந்தபோது அவர் இல்லாமல் இருந்திருந்தால் உலகம் எப்படி இருக்கும் என்பதைக் காட்ட அமெரிக்கா முழுவதும் ஒருநிமிடம் மொத்த மின் விளக்குகளையும் நிறுத்தி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

எதையும் தொடங்குவது எளிது. ஆனால் தொடர்வது கடினம். தொடர்ந்து நடந்து லட்சியத்தை எட்டுவதே சாதனையாளர்களின் சரித்திரம். எடிசனின் பிரமாண்டமான ஆய்வுக் கூடம் ஒருநாள் எதிர்பாராத விதமாக தீக்கிரையாகியது.

பல ஆண்டுகள் சேகரித்த ஆய்வுத் தகவல்கள், உபகரணங்கள், கண்டுபிடிப்புக்கள் அனைத்தையும் அணைத்தது அனல். எடிசனின் மனைவி கண்ணீர் வெள்ளத்தில் கரைந்தே போனாள். எடிசனோ சென்றதையே சிந்தை செய்தால் எப்படி? ஏற்கனவே ஆய்வுகூடத்தில் சில மாற்றங்கள் செய்ய விரும்பினேன். இப்போதோ முழுவதையுமே சீரமைக்க வழி ஏற்பட்டுள்ளது என்றார்.

விடாமுயற்சியுடன் செயலில் இறங்குவது தானே விவேகிகளின் தத்துவம். காலம் என்பது என்ன? அதுவே விடாமுயற்சி தான் என்கின்றார் ஒரு கவிஞர். கணத்தின் விடாமுயற்சியே தினம் ஆகிறது.

தினத்தின் விடாமுயற்சியே வாரம், மாதம், ஆண்டு என ஆகி 'காலம்' என மாறுகிறது என்கிறார். நாம் காலம் கடந்தும் பேசப்பட வேண்டும் என்றால் நமக்குத் தேவை முனை முறியாத முயற்சியே. விழுந்தால் விழுந்தது தான் என்றாய், அது சடலம் . விழுந்தாலும் எழுவேன் என்பது தான் சரித்திரம்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 160 | 240 | 300 |
| தக்காளி | 130 | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 120 | 80 |
| கோவா | 150 | 130 | 120 | 160 |
| கரட் | 130 | 160 | 160 | 160 |
| பூசணி | 50 | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 140 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 100-250 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 150 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 140 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 100 | 160 |
| போஞ்சி | 200 | 140 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 120 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 30-60 | 60-80 |
| இராசவள்ளி | 280 | 250 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 220 | 250 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 30-40 | 80 |





# குயவன் கூறிய உண்மை!

பானைகளைச் செய்து விற்கும் குயவன் ஒரு குப்பத்தில் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் தான் செய்த பானைகளைப் பரணில் அடுக்கிக் வைக்கும் போது, ஒரு தேங்காய் ஓடு அவன் தலையில் வந்து விழுந்தது. தலையில் காயம் ஏற்பட்டது. பின்னாளில் அந்தக் காயம் ஒரு பெரிய தழும்பாக மாறிவிட்டது.

ஒருமுறை அந்தக் குப்பத்தில் பஞ்சம் ஏற்பட, அந்தக் குயவன் வேறு ஒரு நாட்டிற்குச் சென்று, தன் குலத்தொழிலைச் செய்யாமல், அந்த நாட்டின் அரண்மனையில் சேவகனாகப் பணிக்குச் சேர்ந்தான். ராஜா தன் சேவகர்களைப் பார்வையிடும் போது, இவன் தலையில் பெரிய தழும்பு இருப்பதனைப் பார்த்தார். 'இவன் முன்பு ஏதாவது படையில் சிறந்த வீரனாக இருந்திருப்பான் என்று நினைத்து, அவனுக்கு அதிக ஊதியமும் மதிப்பு மிக்க பதவியும் அளித்தார்.

ஒருநாள் குயவன் தனிமையில் ராஜாவுக்கு பணிவிடை செய்த சமயத்தில் ராஜா அவனிடம் உன் தலையில் உள்ள வெட்டுக்காயம் எந்தப் போர்க்களத்தில் ஏற்பட்டது என்று கேட்டார்.

எதற்காக ராஜா கேட்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாத குயவன், 'ராஜா எனக்கும் போர்க்களத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ஒரு பானை செய்யும் குயவன் தானே! என் தலையில் ஒரு தேங்காய் ஓடு விழுந்து காயப்படுத்திவிட்டது. அந்தக் காயம் பின்னாளில் தழும்பாக மாறி விட்டது' என்று நடந்த உண்மையை அப்படியே சொன்னான்.



ராஜாவுக்குக் கடுமையான கோபம்வந்தது. இவனைப்போய் பெரிய வீரனென்று நினைத்து ஏமாந்தோமே என்று அவருக்கு அவமானமாகவும் இருந்தது. 'இந்த விடயம் மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் என்னை எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்?' என்று நினைத்த ராஜா, குயவனிடம், 'உன்னைப் பற்றிய இந்த விடயம் மற்றவர்களுக்குத் தெரியும் முன்பாக இந்த நாட்டை விட்டே ஓடிவிடு' என்று ஆணையிட்டார். குயவனுக்குத் தான் செய்த தவறு இப்போதுதான் புரிந்தது. உடனே அவன், 'ராஜா என் கைகளிலும் கால்களிலும் உள்ள வெட்டுக்காயங்களைப் பாருங்கள். இவை ஒரு போர்க் களத்தில் ஏற்பட்டவை தான்' என்று பொய் கூறினான்.

ராஜா அவன் வார்த்தைகளை நம்பவில்லை. 'பொய் சொல்லாதே! நீ பிறந்த குலம் போர்க்களத்தில் வருவதில்லை. இங்கு இருப்பவர்கள் யாரும் நீ போர்வீரன் அல்ல, ஒரு குயவன் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்பாக ஓடிவிடு என்று எச்சரித்தார் ராஜா.

**நீதி:**
**பேசும் முன் யோசித்துப் பேச வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

முக்கியமாக, 8ஆம் நூற்றாண்டில் சோழர்கள் தஞ்சையில் வாழ்ந்த சுவடே கிடையாது. 9ஆம் நூற்றாண்டில் தான் சோழர்களுக்கு மறுவாழ்வு கிடைத்தது.

விஜயாலயசோழன், தஞ்சையைக் கைப்பற்றும் முன்னர் சுண்ணாம்பால் கட்டப்பட்ட பல மாட மாளிகைகள் தஞ்சையில் இருந்தன என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

அந்தக்கால மன்னர்கள் தங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் துர்க்கைக்கு (கொற்றவை) கோயில் எழுப்புவதை தங்கள் கடமையாக கொண்டார்கள்.

தஞ்சையை தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்த விஜயாலய சோழன், அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நிதம்ப சூதனிக்கு (கொற்றவை) ஒரு கோயில் எடுத்தார். காவேரியின் இரு மருங்கிலும் சிவபெருமானுக்காக கற்றளிகள் எனப்படும் கற்கோயில்கள் கட்டினார் முதலாம் ஆதித்தன்.

விஜயாலயன் பற்றிய அதிக தகவல்கள் இல்லையென்றாலும் அவர் பலம் பொருந்திய மன்னராகவும் பல்லவர்கள் பிடியில்




இருந்த நகரங்களை கொஞ்சம் கொஞ்சமாக தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவராகவும் சில செப்பேடுகள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

விஜயாலயன் ஆரம்பித்து வைத்த சிநேகம் ஆதித்த சோழன் வரை நீண்டதால் பல்லவர்கள், சோழர்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டனர்.

முத்தரையர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சோழ நாட்டின் நகரங்களை பல்லவர்கள் விஜயாலயனுக்கு அடுத்து வந்த ஆதித்தசோழன் வசம் ஒப்படைத்தார்கள்.

பாண்டியர்கள் முத்தரையர்களைப் போல சோழர்கள் ஆபத்தானவர்கள் அல்லர்; நிச்சயம் இவர்களை நம்பலாம் என்ற நம்பிக்கையில் தான் தஞ்சை மண்ணை சோழர்கள் வசம் ஒப்படைத்தனர்.

ஆனால், திருப்புறம்பயம் போரில் அடைந்த வெற்றி, சோழர்கள் பல ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்த தீராத பசியை தீர்த்துக் கொள்ள ஒரு தூண்டுதலாக அமைந்து விட்டது.

ஆட்சி அதிகாரத்திலிருந்த முதலாம் ஆதித்தன் அடுத்த காய் நகர்த்தல்களை யோசிக்கத் தொடங்கினார்.

சோழ நாட்டின் முழு அதிகாரத்தையும் தமக்கே தந்துவிடும்படி அபராஜித வர்மனுக்கு நெருக்கடி கொடுத்தார். ஆனால் பல்லவ அரசர் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவே, நேரடியாக அவர்களோடு போரிடத் தொடங்கினார் முதலாம் ஆதித்தன்.

பல்லவர்களுடன் மோதுவதற்கு முடிவெடுத்த வேளையில் வெற்றி, தோல்வி என்ற பிரச்சினை பற்றி அவர் அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த யுத்தத்தை எதிர்கொள்ளும் உறுதியும் துணிவும் தம்மிடம் உண்டா? என்பது பற்றியே சிந்தித்தார். தோல்வி ஏற்படலாம் என்ற அச்சத்தில் சோழர் குலம் தனது இலட்சியத்தையும் உரிமைகளையும் விட்டுக் கொடுக்க அவர் விரும்பவில்லை.

திருப்புறம்பயம் போர், பல்லவர்களுக்காக சோழர்கள் பங்கெடுத்தது. ஆனால், இந்தமுறை சோழர்களின் பேரரசை நிறுவுவதற்கான தொலைநோக்கில் மிகத் துணிச்சலுடன் பலம் வாய்ந்த பல்லவர்களோடு மோதினார் முதலாம் ஆதித்தன்.

சோழர்களின் திடீர் தாக்குதலால் திடுக்கிட்டுப்போன அபராஜிதவர்மன், உடனடியாகத் தானே போரில் ஈடுபட்டார். ஆனால், சோழர்களின் நல்ல நேரம், போரில் அபராஜித வர்மன் உயிரிழக்க நேரிட்டதால் பல்லவர்களின் படை தடுமாற ஆரம்பித்தது.

யானையின் மீதமர்ந்து போரிட்ட அபராஜித வர்மனை வாளால் ஒரே வீச்சில் கொன்றார் முதலாம் ஆதித்தன். சோழ நாட்டைக் காப்பாற்றி கொண்ட முதலாம் ஆதித்தன், அதே வேகத்தில் தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றி, பல்லவர்கள் ஆட்சி செய்த இடங்களில் எல்லாம் சோழர்களின் கொடியை பறக்க விட்டார்.

(தொடரும்)

ஒவ்வொரு குடி மகனும் சுயமாய் சிந்திக்கும் திறன் உள்ளவனாகத் திகழ வேண்டும்.
– டாக்டர் அம்பேத்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச சேவையாளர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள்

அன்புக்குரிய அரச சேவையாளர்கள் அனைவருக்கும் மகிழ்வான வணக்கம். இன்று தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகிறது.

அரச பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுவதன் காரணமாக, அவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக தபால் மூல வாக்களிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுவில் தபால் மூல வாக்களிப்பு என்பது புதுமனைப் புகுவிழாவின் போது திறப்பு கையளிக்கின்ற நிகழ்வுக்கு ஒப்பானது.

ஆம், அரச சேவையாளர்களின் தபால் மூல வாக்களிப்பு எவ்வாறு அமைகிறதோ அதன் படியே பொதுமக்களின் வாக்களிப்பும் அமையும் என்பதைக் கடந்த காலத் தேர்தல்கள் ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

எனவே உங்களின் வாக்களிப்பு என்பது மிக மிக முக்கியமானது.

அன்புக்குரிய அரச சேவையாளர்களே! நம் தமிழ் பண்பாட்டில் இல்வாழ்வில் இணைவதற்கு முன்பாக பெண் பார்த்தல் என்ற நிகழ்வு இடம்பெறும்.

இதில் மணப் பெண்ணை குத்துவிளக்கில் தீபம் ஏற்றுமாறு கூறுவார்கள்.

ஒரு நெருப்புக் குச்சியைக் கொண்டு குத்துவிளக்கில் உள்ள ஏழு தீபங்களையும் ஏற்ற வேண்டும்.

அவ்வாறு தீபம் ஏற்றப்படுமாயின் அஃது பெண்ணின் மன உறுதியையும் நிதானத்தையும் செலவுச் சிக்கனத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும்.

இதுதவிர, இதற்கு மேலான தத்துவம் ஒன்றும் உள்ளது.

அதாவது ஒரு தீக்குச்சியில் இருந்து எத்தனையோ தீபங்களை ஏற்ற முடியும். அந்தத் தீபங்கள் எங்கும் ஒளிமயமாகக் காட்சி தரும்.

ஆக, ஒரு பெண் தனக்குக் கிடைத்த ஒரு சிறு துரும்பில் இருந்து குடும்பச் செழிப்பை, ஐஸ்வரியத்தை ஏற்படுத்த வல்லவராக இருக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடாகவும் மணப்பெண் தீபம் ஏற்றும் நிகழ்வு அமைகிறது.

ஆக, இங்கு நீங்கள் அளிக்கப் போகும் தபால் மூல வாக்களிப்பும் அந்தத் தீபம் ஏற்றுவது போன்றதுதான்.

ஆம், நீங்கள் தபால் மூல வாக்களிப்பு மூலமாக ஏற்றி வைக்கின்ற தீபம் தமிழ் இனத்துக்கு ஒளியாக அமையட்டும். அந்த ஒளி எங்கும் பிரகாசித்து நேர்மையும் நீதியும் வெளிப்படைத்தன்மையும் வாக்கு வன்மையும் மனத்தூய்மையும் போலித்தனமற்ற தமிழினப் பற்றும் நிறைந்ததான தமிழ் அரசியல் தலைமையை தரட்டும்.

எனவே நீங்கள் வாக்களிப்பதற்கு முன்னதாக ஆழ்ந்து சிந்தியுங்கள்.

ஏனோதானோ என்று அலட்சியம் செய்து விடாதீர்கள். நீங்கள் அளிக்கும் வாக்குகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான அடித்தளம் என்பதை மறவாமல் உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

தமிழ் மக்களுக்கான நல்லதொரு அரசியல் தலைமையை உருவாக்குங்கள்.

## விபத்தில் முதியவர் படுகாயம்
# சிகிச்சையளிக்க மறுத்த தனியார் வைத்தியசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டி மோதி விபத்து இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில், துவிச்சக்கர வண்டியில் வந்த முதியவர் தலையில் படுகாயமடைந்து, மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த முதியவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்காக தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர் காவு வண்டியைக்கோரியபோதும் குறித்த தனியார் வைத்திய சாலைகள் மறுப்புத் தெரிவித்தன. இதனால் அப்பகுதியில் நின்ற ஆட்டோ மூலம் முதியவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ஜ-5-8)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பருத்தித்துறை VM வீதி முதலாவது சந்தி, பருத்தித்துறை கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொரியமடு, சின்னஅடம்பன், இராசபுரம் (லைக்கா கிராமம்) ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** தவசிக்குளம் கிராமம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, பட்டாணிச் சூரிலிருந்து பம்பைமடு வரை, புளிதறித்த புளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு, ஓமேகாலைன், வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, சுயன் அரிசிஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசிஆலை, லீலா ஆலை, சந்திரிகா அரிசி ஆலை, வாரிக்குட்டியூர், கிறிஸ்தவ குளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** செம்மண்தீவு, நானாட்டான், பள்ளங்கோட்டை, எருவிட்டான், முருங்கன் பிட்டி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், டோன் பொஸ்கோ, சீனத்துறை முகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வடக்கில் செயற்படும் படையினர் மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள்
### ரமேஷ் பத்திரண கூறுகிறார்

(கொழும்பு)

வடமாகாணத்தில் தேர்தல் பிரசாரங்களில் படையினர் ஈடுபடுகின்றனர் என்பதும், படையினர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தேர்தல் செயற்பாடுகளில் தலையீடுகளைச் செய்கின்றது என்றும் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பான அப்பட்டமான பொய்யாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னெடுத்து வரும் தேர்தல் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தும் வகையிலும், மக்களை அச்சுறுத்தும் வகையிலும் படையினரும், புலனாய்வாளர்களும் செயற்பட்டு வருவதாக அக்கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

அதுமட்டுமன்றி, வழமைக்கு மாறாக முக்கிய வீதிகளில் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தற்போது அவை நிரந்தரமாக்கப்பட்டு பொதுமக்கள், வேட்பாளர்களை இலக்கு வைத்து சோதனைகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டனர்.

தற்போதைய சூழலில் வடக்கு கிழக்கு உட்பட நாடாளவிய ரீதியில் சட்டவிரோத செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்துவதை இலக்காக கொண்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனை அடிப்படையாகக் கொண்டே விசேட சோதனைச் சாவடிகளும், ரோந்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தென் மாகாணத்திலும்காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்க்கை என்பது ஒரு சுமை; அதைத் தாங்கிக் கொள். அது ஒரு முள் கிரீடம்; அதை அணிந்து கொள். இந்தத் துணிச்சலே அழகான வாழ்வின் அத்திபாரம். -அப்ராம் ரியான்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை
# சித்து



ஜால வித்தை போன்ற சித்துக்களை விளையாடும் - அவைகளைக் கற்றுக் கொள்ள விரும்பும் அன்பர்களுக்கும், இத்தகைய சித்துக்களைக் காணத் துடிக்கும் - கண்டு வியப்புற்று மதிமயங்கும் நண்பர்களுக்கும், உருக்கத்தோடு சொல்லுகிறேன். "சமூகத்திற்கு எந்தவித நன்மையும் விளைவிக்காத நஷ்டமும், கஷ்டமுமே தரும் செயல்கள் பலவற்றை "சித்து" எனக் கொள்ளும் மயக்கத்தை விட்டு விடுங்கள்" நன்றாக ஆராயுங்கள்.

ஒரு துளி விந்துவைக் கருப்பையில் வாங்கிப் பத்தாவது மாதத்தில் எழில் மிகுந்த அற்புதச் சிற்பமான குழந்தையாக்கித் தரும் தாய்மார்களின் உடலில் நடைபெறும் சித்து எத்தகையது? ஒரு நெல்லை நூறு நெற்களாக்கித் தரும் விவசாயியின் செயல் ஒரு சித்து அல்லவா? ஒரு பொத்தானை ஒரு இடத்தில் அழுக்கினால், எவ்வளவோ இடத்தில் எண்ணிறந்த விளக்குகள் எரிகின்றனவே இது ஒரு "பெருஞ்சித்து"அல்லவா? இரும்பை நகரச் செய்தும், பறக்கச் செய்தும் அதன்மூலம் கோடிக்கணக்கான மக்கள் சுலபமாகப் பல மைல் தூரத்தை எளிதாகக் கடந்து பிரயாணம் செய்யும் வசதியை ஏற்படுத்தி இருக்கிறார்களே சில தொழில் அறிஞர்கள். இது எத்தகைய சித்து?

ஒரு நாளைக்கு இருபத்தைந்தாயிரம் மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றியும் சுமார் 16 இலட்சம் மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றியும் வரும் பூமியின் இயக்கத்தை, எந்த விதமான சித்து என மதிக்க வேண்டும். இவ்விதமாக இயற்கையிலும் செயற்கையிலும் நடைபெறும் சித்துக்களை ஊன்றி ஆராயுங்கள்.

# வாக்குகள் விலைபோவதை தடுத்து நிறுத்துவோம்

## தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**ஒரு நியாயமான தீர்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தேர்தல் அரசியலினால் கட்சி களுக்குள்ளேயும் கட்சிகளுக்கிடையேயும் எழுந்துள்ள ஒற்று மைக்குலைவு ஒரு வேதனையான விடயமாக அமைந்திருக்கிறது. இன்றைய எமது நிலையில் குழுக்களாகப் பிரிந்து நின்று சுயநலத் தேர்தல் அரசியல் செய்வது ஆரோக்கியமான அணுகு முறையாக அமையாது என்றும் தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது வாக்குகள் அற்ப சலுகைகளுக்காக விலை பேசப்படும் இந்த நிலையிலே எமது தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள நாம் பிரிந்து நின்று சண்டையிடுவதற்கான காரணங்களைத் தேடுவதிலும் பார்க்க ஒற்றுமைப்பட வேண்டியதற்கான அவசியத்தையும் அதன் அனுகூலங்களையும் ஆராய்வது ஆரோக்கியமானதாக அமையும்.

எமக்கு நியாயப்படியும் சட்டப்படியும் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஒழுங்குவிதிக்கமைய தரமறுத்து அவற்றை தமது முகவர்களின் ஊடாக குழப்பமான முறையில் நடைமுறைப்படுத்த முயன்று அவற்றை எமக்கு வழங்கப்படும் சலுகைகளாக சித்திரிக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. அதனைச் செய்யும் அந்த முகவர்கள் செயல் வீரர்கள் போல நம் மத்தியிலே உலா வருகின்றனர்.

வறுமையையும் சமூக சிக்கல் நிலைகளையும் எம்மக்கள் மத்தியிலே திட்டமிட்டு ஏற்படுத்திவிட்டு அதை தீர்க்கவென தற்காலிக போலிச் சலுகைகளைக் காட்டி அவர்களின் வாக்குகளை விலை பேச முயல்வது மனிதத்துவம் ஆகாது.

தமது வறுமையைப் போக்கவென தமது வாக்குகளைச் சலுகைகளுக்காக விற்கும் எம்மவர்களை கோபித்துக் கொள்வதும் அர்த்தமற்றது. அந்தச் சூழ்நிலைக் கைதிகளின் நிலையையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பல்வேறு அழுத்தங்களால் தடம் மாறி நிற்கும் மக்கள், எம் மக்கள் அல்ல என்று ஆகிவிடாது அவர்களையும் தடம் மாற்றி சலுகைகளுக்காக எமது வாக்குகள் விலைபோகாது என்பதை சரியான முறையில் எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நிரூபிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் இவ்வாறு விலை பேசும் செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். இது எமது விடியலை நோக்கிய பயணத்திற்கு உரம் சேர்க்கும். எலும்புத் துண்டையும் உணவுத் துண்டையும் காட்டி தமது ஆட்டத்திற்கு ஆட்டி வைக்கப்படும் வட்டரங்கு விலங்குகள் (Circus animals) போல நாம் இல்லை என்பதை தெளிவாக்கும்.

பொது விடயங்கள் மற்றும் அடிப்படை பிரச்சினைகள் சம்பந்தமாகவேனும் நாம் ஒற்றுமைப்படாவிட்டால் நாம் பிரித்தாளப்பட்டு எமது அபிலாசைகள் சிதைக்கப்படுவதற்கான ஆபத்து நிலை இருக்கிறது. கோணேசர் கோயிலும் நல்லூர் ஆலயமும் கூட நம் பூர்வீகமல்ல என வாதிடுபவர்களுக்குக்கூட இது வரப்பிரசாதமாக அமைந்துவிடும். இந்த ஒற்றுமைக்காக தமிழ் மக்கள் பேரவையானது அனைத்துத் தமிழ் தலைவர்களுடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருக்கிறது. இந்த முயற்சிகள் தொடரும்.

இந்த முயற்சி வெற்றி பெறுவதற்கு சரியான திசையில் சிந்திக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பெரும் பொறுப்பு தமிழ் மக்கள் முன் எழுந்து நிற்கிறது. அரசியல்வாதிகளின் குறுகிய சுயநல சிந்தனைப் போக்குகள் காரணமாகவும் மாறிவரும் நெருக்கடியான அரசியல் சூழ்நிலை காரணமாகவும் எம்மக்கள் மனமுடைந்து விரக்தியடைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இதன் காரணமாக சரியாகச் சிந்தித்து வாக்களிக்கும் திறன் உடைய பலர் "வாக்களித்து என்ன பயன்" என்று எண்ணி வாக்களிக்காமல் இருந்து விடுவார்களோ? என்ற ஏக்கம் எம்மத்தியில் எழுகிறது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் விலைபோன வாக்குகளால் மட்டுமே எமது பிரதிநிதிகள் எனப்படுவோர் தெரிவாகும் ஒரு ஆபத்து நிலை இருக்கிறது. அவ்வாறு நடந்தால் அது ஒரு பிழையான செய்தியை உலகிற்கு தெரிவிப்பதாக அமைந்துவிடும்.

எனவே எத்தனையோ இடர்களைத் தாண்டி பயணித்த நாம் மனம் சோர்ந்து போகாது ஒரு தூய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக அனைவரும் அணிதிரண்டு சிந்தித்து வாக்களிப்போம். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தவறாமல் சிந்தித்து வாக்களிக்கத் தூண்டுவோம். எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்வோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஐ.பி.எல்.போட்டியை நடத்த பி.சி.சி.ஐ.ஆர்வம்



## கங்குலி தெரிவிப்பு

இந்தியன் பிரீமியர் லீக்கை நடத்துவதற்கு பி.சி.சி.ஐ. என அழைக்கப்படும் இந்திய கிரிக்கெட் நிறுவனம் ஆர்வமாகவுள்ளதாக அதன் தலைவரும் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவருமான சவுரவ் கங்குலி தெரிவித்தார்.

எனினும் அதன் ஆரம்பத் திகதி தொடர்பில் இறுதி முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொவிட்-19 தொற்று நோயின் காரணமாக கடந்த மார்ச் மாதம் ஆரம்பமாகவிருந்த ஐ.பி.எல். போட்டிகள் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட கருத்தினை வெளியிட்டுள்ள சவுரவ் கங்குலி இந்தியாவில் ஐ.பி.எல். போட்டிகள் நடத்தப்படுவதை உறுதிசெய்வது பி.சி.சி.ஐ.யின் முன்னுரிமை எனவும் கூறினார்.

கடந்த புதன்கிழமை தனது 48 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய சவுரவ் கங்குலி, உலகம் முழுவதும் ஒரு பயங்கரமான கட்டமாக இருந்த நிலையில் கிரிக்கெட் இயல்பு நிலைக்கு திரும்புவது முக்கியம் என்றதுடன் எவ்வாறாயினும், ஐ.பி.எல்.குறித்த எந்தவொரு முடிவையும் சர்வதேச கிரிக்கெட் நிறுவனம், இந்த ஆண்டின் பிற்பகுதியில் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாக திட்டமிடப்பட்டுள்ள இருபது-20 உலகக் கிண்ணத்துக்கு பின்னர் எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (4)

# கரிபியன் பிரீமியர் லீக்கில் விளையாடவுள்ள முதல் இந்தியர்

(டில்லி)

இந்தியாவைச் சேர்ந்த 48 வயதுடைய வீரரான பிரவீன் தம்பே கரீபியன் பிரீமியர் லீக் இருபது- 20 கிரிக்கெட் தொடரில் டிரினிடாட் நைட் ரைடர்ஸ் அணி நிர்வாகத்தால் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளார்.

இப் போட்டித் தொடரில் பிரவீன் தம்பே விளையாடும் பட்சத்தில் கரீபியன் பிரீமியர் லீக்கில் விளையாடிய முதல் இந்திய வீரர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.

மும்பை கிரிக்கெட் அணிக்காக முதற்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள பிரவீன் தம்பே, தனது 41 ஆவது வயதில் ஐ.பி.எல்.இருபது-20 போட் டியில் அறிமுகமானார்.

இதன் பின்னர் தொடர்ந்து ஐ.பி.எல்.போட்டிகளில் பங்கேற்ற அவர், அதிக வயதில் ஐ.பி.எல். போட்டியில் விளையாடிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

கடந்த ஆண்டு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இவரை ஏலத்தில் எடுத்தது. ஆனால், அபுதாபி ரி-10 லீக்கில் விளையாடியதால் ஐ.பி.எல். தொடரில் விளையாட அனுமதி இல்லை என்று பி.சி.சி.ஐ. தெரிவித்தது. இதனால் கொல்கத்தா அணி அவரை நீக்கியது.

இந்நிலையில் கரீபியன் பிரீமியர் லீக்கில் விளையாடுவதற்கான வீரர்கள் ஏலத்தில் பங்குபெற விண்ணப்பம் செய்தார். அவரை டிரினிடாட் நைட் ரைடர்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது. இவ் வணியின் உரிமையாளர்களில் ஒருவராக நடிகர் ஷாருக்கான் உள்ளார்.

இது குறித்து பிரவீன் கூறுகையில், "நான் உடற்தகுதியாக இருந்த போதிலும் பி.சி.சி.ஐ. என்னை விளையாட அனுமதிக்கவில்லை. அப்படியிருக்கும் போது நான் ஏன் மற்ற லீக்குகளில் விளையாடக்கூடாது. நான் இந்தியாவுக்கு வெளியே நடைபெறும் லீக்கில் விளையாட தகுதி பெற்றுள்ளேன்.

இதனால் டிரினிடாட் அணி என்னை ஏலம் எடுத்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு செல்வதற்கு முன் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைளையும் எடுத்துக் கொள்வேன்" என்றார். கரீபியன் பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 18 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## நடிகை ஐஸ்...

நடிகை ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரின் மகள் ஆரத்யாவும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முன்னதாக, அமிதாப் மற்றும் அபிஷேக் ஆகியோர் கொவிட் - 19க்கு சாதகமாக சோதனை செய்யப்பட்டனர். வைரஸ் பாதிப்புக்குள்ளான அவர்கள் தற்போது மும்பையின் நானாவதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமிதாப், அபிஷேக் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரியவந்த பிறகு அவர்கள் வீட்டில் இருக்கும் அனைவருக்கும் பரிசோதனை செய்யப்பட்டது.

பரிசோதனையில் ஐஸ்வர்யா ராய் பச்சன் மற்றும் அவரின் மகள் ஆரத்யாவுக்கும் கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

ஐஸ்வர்யா ராய்க்கும் ஆரத்யாவுக்கும் கொரோனா பாதிப்பு இருப்பது குறித்து அறிந்த ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஐஸ்வர்யா ராய் மற்றும் ஆரத்யா விரைவில் குணமடையப் பிரார்த்தனை செய்வதாக ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை, ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரது மாமியார் ஜெயா பச்சன் இருவரும் கொரோனா தொற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில் அவர்கள் கொரோனா வைரஸுக்கு எதிர்மறையாக அறிவிக்கப்பட்டனர்.

எனினும் இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலேயே ஐஸ்வர்யா ராயும் அவரது மகளும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## விசவாயு தாக்கி...

தாவது,

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் பல மாதங்களாக குவிக்கப்பட்டிருந்த மாட்டு சாணத்தினை பாரவூர்த்தி ஒன்றில் சிலர் ஏற்றியுள்ளனர்.

இதன்போது சாணத்தை ஏற்றிய இளைஞர் ஒருவர் இளைப்பாறுவதற்காக குறித்த சாணிக் கும்பத்தின் மேல் இருந்துள்ளார்.

இதன்போது மாட்டு கழிவில் இருந்து தாக்கிய விசவாயு காரணமாக மூச்சு திணறல் ஏற்பட்ட நிலையில் ஓமந்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவசர சிகிச்சையளிக்கப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக குறித்த இளைஞன் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் குறித்த இளைஞன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் எஸ்.ரஞ்சிதகுமார் (வயது - 28) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா-250)

## தபால் மூல வாக்...

மூல வாக்களிப்புகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

தபால் மூல வாக்களிப்புக்காக ஏழு நாட்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம், 16, 17ஆம் திகதிகளிலும் எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளிலும் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன.

சுகாதார சேவைகள் அதிகாரிகள் இன்றைய தினம் வாக்களிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சுகாதார பிரிவினர் மற்றும் சகல மாவட்டங்களிலும் உள்ள தேர்தல் அலுவலக அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலும் சேவையாற்றும் சேவையாளர்கள் நாளை மற்றும் நாளை மறுதினம் வாக்களிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சுகாதார பிரிவினர் மற்றும் சகல மாவட்டங்களிலும் உள்ள தேர்தல் அலுவலக அதிகாரிகள் எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும்.

இந்தத் தினங்களில் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் 20 மற்றும் 21ஆம திகதிகளில் வாக்களிக்க முடியுமெனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஞா)

## இருவருக்கு...

தல் முகாமில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் முடிவுகள் இரவு 8.30 மணிக்கு வெளியாகிய நிலையில் இக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த 32 பேருக்கும் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 55 பேருக்கும் என மொத்தமாக 87 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

இதில் வவுனியா பம்மைமடு தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஞா-250)

## இராணுவச் சிப்...

பணியாற்றும் வவுனியா மடுக்கந்தைப் பகுதியில் வசித்துவரும் இராணுவச் சிப்பாய்க்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அவரது குடும்பத்தினர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தக்காடு இராணுவ் முகாமில் சாரதியாகப் பணியாற்றும் வவுனியா மடுகந்தை பகுதியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்து நேற்று முன்தினம் கந்தக்காடு இராணுவ முகாமிற்கு திரும்பிச் சென்றபோது கொரோனா மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து நேற்று வவுனியாவிலுள்ள அவரது மனைவி, தாயார், மகள், உறவினர் உட்பட நான்கு பேர் பேருந்தில் தனிமைப்படுத்தலுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-299)

## பாடசாலைகளு...

கல்வி அமைச்சினால் நேற்று மாலை வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிற்கும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் இடையில் கல்வி அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)

## 106 பேருக்கு...

பொருள் புனர்வாழ்வு மையத்தில் இருந்து சேனபுர மத்திய நிலையத்திற்கு மாற்றப்பட்ட 76 கைதிகளும் அவர்களுடன் தொடர்பினைப் பேணிய 14 பேரும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ராஜாங்கனையில் கொரோனா வைரஸ் தொற்றுறுதியானவருடன் தொடர்பைப் பேணிய 4 பேருக்கும் கோவிட் - 19 தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், ஈரானில் இருந்து வருகை தந்த 2 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய நாட்டில் கோரவிட் - 19 தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 617 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## தபால் மூல...

டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்துள்ளார்.

மாற்றுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஆலோசகர் ஒருவருக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக ராஜாங்கனை பிரதேசத்தில் நேற்று மட்டும் நான்கு பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே ராஜாங்கனை பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்களில் இந்த வாரம் இடம்பெறவிருந்த தபால்மூல வாக்களிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## கோஷ்டி மோதல்...

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்தவர்களான தங்கவேல் தங்கேஸ்வரன் (வயது - 31) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையிலும் தங்கன் மதன் (வயது - 38) மற்றும் முருகன் ரதீஸ்வரன் (வயது - 31) ஆகிய இருவரும் அடிகாயங்களிற்கு இலக்கான நிலையிலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மஹஜன சம்பத
திகதி 12/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 4181
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 2 5 6 8 5
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 12/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 277
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 33 37 45
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 12/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 548
வெற்றி எழுத்து L சுப்பர் இலக்க 25
வெற்றி இலக்கங்கள் 21 49 57 67

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 12-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2476
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 32 44 55 77
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.07.12
சீட்டிழுப்பு இலக்கம் - 289
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 01 12 45 68
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 978
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.07.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,363,575/-
வெற்றி இலக்கங்கள் 05 30 56 77
ஆங்கில எழுத்து O
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2859
வர்ணம் ஊதா
திகதி 12.07.2020
வெற்றி இலக்கங்கள் 12 39 41 43
மிதுனம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,282,292
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1174
சீட்டிழுப்பு திகதி 12.07.2020 ஞாயிற்றுக்கிழமை
H 07 16 44 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51, 922,876
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 597
வர்ணம்: மஞ்சள்
திகதி: 12.07 2020
ஞாயிற்றுக்கிழமை
Y 08 13 27 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,214,770
தொ.பே: 0112 333 546/47
Web; www.dlb.lk

## உரும்பிராயில்...

இந்தச் சம்பவத்தில் குரும்பசிட்டி வசாவிளான் பகுதியைச் சேர்ந்த அனோஜன் கஜேந்தினி (வயது-17)என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது பட்டாவுடன் எதிர்பாராதவிதமாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே இளம் குடும்பப் பெண் உயிரிழந்ததுடன் அவரது கணவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பந்தமான விசாரணைகளை கோப்பாய்ப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-78)

## படகு மூலம் யாழி...

னர்.

யாழ்.தொண்டமானாறு வடக்குக் கடற்பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தமிழ்நாடு அகதிகள் முகாமொன்றிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக வந்த இருவரும், இவர்களுக்கு உதவிய இருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இவர்கள் பயன்படுத்திய படகையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த இருவரில் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரெனவும் சுவாசப் பிரச்சினை காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஞா)

# பெண்ணின் ஒன்றரை பவுண் சங்கிலி அறுப்பு

(கொடிகாமம்)

வீதியால் சென்ற பெண் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலி இனந்தெரியாதவர்களால் அறுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-114)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9879)
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

விரைவு பொதிகள் சேவை
DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன
Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3176)
021 221 1995
076 283 2397

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (3289)

பதவி வெற்றிடங்கள்
O/L தகைமை உடையவரா? எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.
- வயதெல்லை 18 தொடக்கம் 28 வரை
- ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது
(3293)
தொடர்புகளுக்கு :- 076 808 2241

வீடு வாடகைக்கு
கோவில் வீதி, நல்லூர் மற்றும் சுண்டுக்குழி பகுதியில் வீடுகள் வாடகைக்கு உண்டு. (3290)
தொடர்பு : 077 225 9030

தேவை
காத்தோட்டிக்காய், மொந்தன் வாழைக்காய் தேவை. (C-9886)
தொடர்பு
076 937 5167
075 086 6867

இலங்கை விசா நீடிப்பு
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT
எமது கிளைகள்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மருதங்கேணி, பருத்தித்துறை, சாவகச்சேரி, திருகோணமலை, மாணிப்பாய், வல்வெட்டித்துறை

(C-9624)
V2 TRAVELS 0768227499

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை பாஸ்கரன்

[ சொக்குமாமா ]

பிறப்பு 18-03-1976 இறப்பு 12-07-2020

மாவடி வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், நவோதயா வீதி, ஆவரங்காலை(கரதடி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாஸ்கரன் (சொக்குமாமா) அவர்கள் நேற்று (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் சுகிந்தாவின் அன்புக் கணவரும் றமீனா, வர்ணன், சாமினா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சதானந்தன் (கடவுள் - பிரான்ஸ்), சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தம்பியும் தங்கராசா - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் தீபன் (பிரான்ஸ்), மகிந்தா, ஜீவன், லவணன், கஸ்தூரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (13.07.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவோதயா வீதி, ஆவரங்கால் (கரதடி). (3292) தகவல்:- குடும்பத்தினர்

நாடாளுமன்ற தேர்தல்-2020
(யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)
நம்பிக்கையான எதிர்காலத்திற்கு...
டக்ளஸ் தேவானந்தா
[செயலாளர் நாயகம் - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி]
இலக்கம் 05


மருதயினார் ஜெயகாந்தன்
(காந்தன் தோழர்)
இலக்கம் 06
[தவிசாளர் - ஊர்காவற்றுறை]

முடியப்பு றெமீடியஸ்
இலக்கம் 07
[மனித உரிமைகள் சட்டத்தரணி/ யாழ். மாநகர சபை உறுப்பினர்]
எமது சின்னம் வாக்களிப்பீர்...

X
(1039)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.